விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
Ria
Moving Money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள்,பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து Western Union, Money Gram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
நாடுங்கள்
Authorized Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670 Fax: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 24 திங்கட்கிழமை (09.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 326

## பல்நோக்கு இளைஞர் நிலையம் நாடு முழுவதும் அமைக்கப்படும்

### அமைச்சர் நாமல் யாழில் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

முழுக் குடும்பமும் ஒன்றாக உடற் பயிற்சி உள்ளிட்ட விளையாட்டுகளில் ஈடுபடக்கூடிய, அமைதியாக தங்களது நேரத்தை செலவிடக்கூடிய வகையில் பல்நோக்கு இளைஞர் நிலையம் நாடு முழுவதும் அமைக்கப்படும்

19

### இனந்தெரியாத குழுவினரால்

## மல்லாவியில் வாள்வெட்டு; குடும்பஸ்தர் படுகாயம்

(மல்லாவி)

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பாலிநகர் பட்டுப் பூச்சி கிராமத்தில் எட்டுப் பேர் கொண்ட இனந்தெரி யாத ஆயுதக்குழு ஒன்

19

### அறிகுறிகள் காணப்படாதவர்களிலிருந்து

# கொரோனா பரவும் அதிக ஆபத்து உள்ளது

### தொற்று நோயியல் பிரிவு மருத்துவர் எச்சரிக்கை



(கொழும்பு)

**கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் இல்லாமல் அதனால் பாதிக்கப்பட்டவர்களில் இருந்து மற்றவர்களுக்கு வைரஸ் பரவுவதற்கான ஆபத்து அதிகம் என்று தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர எச்சரித்துள்ளார்.**

இலங்கையில் அடையாளம் காணப்பட்ட பெரும்பாலான நோயாளிகளிடம் எந்த அறிகுறி களும் காணப்படவில்லை என்றும், அவர்களுக்கு தெரியா மல் இந்த நோய் வேறொரு நப ருக்கு பரவுகிறது என்றும் சுகா தார அமைச்சின் தொற்று நோயி யல் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்தார்.

கொழும்பு மாநகராட்சி

19

### சஜித் அணியிலுள்ள

## ஐவர் மீது விசாரணை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப் பினர்கள் ஐவருக்கு அரசியல் பழிவாங்கல் பற்றி விசாரணை நடத்தி

19

### பேருந்துக்கான

## கட்டணங்கள் திருத்தப்படும்

### இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

அறிமுகப்படுத்தப்படவுள்ள கொரோனாப்பாதுகாப்பு போக்கு வரத்துக் கொள்கையின்படி பேருந்து கட்டணங் கள் திருத்தப்படும்

19

### கொரோனா பரவல் அதிகரித்தால்

## ஏனைய பகுதிகளையும் தனிமைப்படுத்த தயாராக உள்ளோம்

இராணுவத் தளபதி
சவேந்திர சில்வா அறிவிப்பு



03ஆம் பக்கம் பார்க்க

## வெலிக்கடைச் சிறைச்சாலையில் நேற்றும் 72 பேருக்கு தொற்று

### தொற்று எண்ணிக்கை 102 ஆக உயர்வு

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலை யில் மேலும் 73 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது

19

### நேற்றும்

## 510

### பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் மேலும்

19

### கொரோனா தொற்றாளர் நடமாடியதால்

## கிளிநொச்சி ஜெயபுரம் கிராமம் தற்காலிகமாக முடக்கப்பட்டது

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தின் ஜெயபுரம் பகுதியில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நபர் சமூக முடக்கலை மீறிச் செயற்பட்டமை அம்பல

19

### வடக்கு - கிழக்கில்

## இடியுடன் கூடிய கனமழை பெய்யும்

7ஆம் பக்கம் பார்க்க

### ரூ. 1½ கோடி பெறுமதியான

## ஐம்பொன் சிலைகள் வட்டுக்கோட்டையில் மீட்பு



(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை - சங்கானை ஓடக்கரை நாகதம்பிரான் ஆலயத்துக்கு அண்மை

19

### கொரோனாவினால்

## 35 ஆவது உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் நேற்று முதிய வர் ஒருவர் கொரோனாத் தொற் றினால் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் திணைக் களத்தினால் அறிவிக்கப்பட்டுள் ளது.

உயிரிழந்தவர் 78 வயது டைய நபர் என்றும் உயிரிழந்த நிலையில்

19

### மோசடிக்காரர்

## தமிழகம் செல்ல உதவியவர் கைது

(யாழ்ப்பாணம்)

நிதி நிறுவனம் ஒன்றை நடத்தி வாடிக்கையாளர் களின் சுமார் 1200 கோடி ரூபாய் பணத்தை சுருட்டிக் கொண்டு

19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### மன்னார் கிராம சேவகர் கொலை;
# சக கிராம சேவகரின் கணவர் உள்ளிட்ட இருவர் கைது

(மன்னார்)

மன்னாரில் கிராம சேவகர் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் சக கிராம சேவகரின் கணவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன், அவரது உறவினரும் கைதாகியுள்ளார்.

கடந்த 3 ஆம் திகதி இலுப்பைக் கடவை ஆத்திமோட்டைப் பகுதியில் வைத்து குறித்த கிராம சேவகர் இனந்தெரியாதோரால் அடித்துப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்று பலரும் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இந்த நிலையிலேயே பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணைகளின் அடிப்படையில் படுகொலை செய்யப்பட்ட கிராம சேவகருடன் பணியாற்றும் சக பெண் கிராம சேவரின் கணவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

உயிரிழந்தவரும், கைதானவரும் ஒரே பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிய வருகிறது.

அத்துடன், கைதானவரின் உறவினரான இன்னொருவரும் கைதாகியுள்ளார். அவர் மாடு மேய்ப்பவர். நேற்று முன்தினம் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஞா)

# கிளிநொச்சியில் விபத்து; இரண்டு பேர் படுகாயம்

(முறிகண்டி)

கிளிநொச்சியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி வைத்தியசாலையை அண்மித்த ஏ9 வீதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சியிலிருந்து முறிகண்டி நோக்கி ஒரே திசையில் பயணித்த டிப்பர் மற்றும் முச்சக்கர வண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளாகின.

டிப்பர் வாகனம் சடுதியாக பிறேக் அடித்தமையால் அதே திசையில் வந்துகொண்டிருந்த முச்சக்கரவண்டி டிப்பரின் பின்பகுதியில் மோதுண்டு விபத்துக்குள்ளாகியது.

பூநகரியிலிருந்து கிளிநொச்சியிலுள்ள தனது வீட்டுக்கு வருகை தந்து கொண்டிருந்த வேளையில் நேற்று இரவு 6.30 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவரும் படுகாயமுற்ற நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-100)

### பிங்கிரிய - பனாவெவ பகுதியில்
# தனிமைப்படுத்தலிலிருந்தவர் திடீரென உயிரிழப்பு

(கொழும்பு)

பிங்கிரிய - பனாவெவ பகுதியைச் சேர்ந்த 71 வயது நபர் தனது வீட்டில் சுய தனிமைப்படுத்தலில் இருந்த நிலையில், கடுமையான நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந்துவிட்டதாக சிலாபம் மருத்துவமனையின் தலைவர் தெரிவித்தார்.

காய்ச்சல் மற்றும் மூச்சுத் திணறல் காரணமாக அந்த நபர் 30 ஆம் திகதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

கொரோனா பிரிவில் சிகிச்சை பெற்று குணமடைந்த பின்னர் அவரது அவசர கோரிக்கையின் பேரில் வீட்டுக்குச் சென்றார்.

அதன்பிறகு வீட்டில் சுய தனிமைப்படுத்தலில் இருந்த நபர் 6 ஆம் திகதி மீண்டும் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இந்த நபரின் மாதிரிகள் கொரோனா சோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், இதுவரை எந்த முடிவுகளும் கிடைக்கவில்லை என்றும் மருத்துவமனை இயக்குநர் தெரிவித்தார். (ஞா)

### சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள்
# கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிகாட்டல் நடைமுறைகள்
## தொற்று நோயியல் பிரிவினால் அறிவிப்பு

(கொழும்பு)

சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டல் குறிப்புக்களை தலைமை தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட வழிகாட்டல் குறிப்பின்படி,

ஒரு நபர் கோவிட்-19 நோயாளியின் நெருங்கிய தொடர்பாளர் என அடையாளம் காணப்பட்டு சுய தனிமைப்படுத்தப்பட்டால், வீட்டின் மற்ற உறுப்பினர்களும் தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

14 நாட்களுக்குப் பிறகு நெருங்கிய தொடர்பு வட்டத்தில் பி.சி.ஆர் சோதனை நடத்தப்படும். அது எதிர்மறையாக காணப்பட்டால் சம்பந்தப்பட்ட வீட்டு உறுப்பினர்கள் அனைவருக்கும் தனிமைப்படுத்தப்பட்ட காலம் முடிவடையும்.

எவ்வாறாயினும், முடிவு நேர்மறையானதாக இருந்தால், சம்பந்தப்பட்ட நபர் மருத்துவமனையில் அல்லது ஒரு சிகிச்சை மையத்தில் அனுமதிக்கப்படுவார். அதே நேரத்தில் மற்ற உறுப்பினர்கள் மேலும் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும்.

கோவிட்-19 தொற்றுக்குள்ளான ஒரு நபர் குணமடைந்ததைத் தொடர்ந்து மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினால், சம்பந்தப்பட்ட நபர் மட்டுமே தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

ஒரு நபர் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தால் அல்லது ஒரு பிரத்தியேக வசதியில் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டால், சம்பந்தப்பட்ட தனிநபர் மட்டுமே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டால் போதுமானது.

இதேவேளை, சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட ஒரு குடும்பத்தால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளையும் விளக்கினார்.

சுய தனிமைப்படுத்தப்பட்ட நபர் மற்ற வீட்டு உறுப்பினர்களிடமிருந்து 1 மீற்றர் தூர இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும். முடிந்தவரை தனி கழிப்பறையைப் பயன்படுத்த வேண்டும்.

ஒரு பொதுவான கழிப்பறை பயன்படுத்தப்படுகிறதென்றால், முதலில் வீட்டு உறுப்பினர்கள் கழிப்பறையை பயன்படுத்திய பின்னர், சம்பந்தப்பட்ட நபர் கழிப்பறையைப் பயன்படுத்த வேண்டும். பயன்பாட்டிற்குப் பிறகு சவர்க்காரமிட்டு குழாய் மற்றும் கதவு திறக்க பயன்படும் பகுதி மற்றும் கைகளால் தொட்ட பகுதிகளை நன்றாகக் கழுவ வேண்டும்.

மீண்டும், மற்ற வீட்டு உறுப்பினர்களும் பயன்படுத்துவதற்கு முன்பு இதுபோன்ற இடங்களை சுத்தப்படுத்த வேண்டும்.

சம்பந்தப்பட்ட நபர் மற்ற வீட்டு உறுப்பினர்களை சந்திக்க வேண்டும் என்றால், முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியை பேணுவது உட்பட சரியான பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று தெரிவித்தார். (ஞா)

### தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீக்கப்பட்டாலும்
# குறைந்தபட்ச ஊழியர்கள் மாத்திரமே சேவைக்காக அழைக்கப்பட வேண்டும்
## உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் இன்று நீக்கப்பட்டாலும் அரச சேவையில் கடமைகளுக்காக, குறைந்தபட்ச ஊழியர்கள் மாத்திரம் சேவைக்காக அழைக்கப்பட வேண்டும் என்று அரச சேவை, மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி அறிவித்துள்ளார்.

தற்போது மேல் மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் இன்றைய தினம் நீக்கப்படவுள்ள போதிலும் சுகாதார பாதுகாப்பு நிலையை கருத்திற் கொண்டு அரச நிறுவனங்களில் சேவைக்காக அழைக்கப்பட வேண்டியவர்கள் கடமைகளை முன்னெடுப்பதற்கு குறைந்தபட்ச ஊழியர்கள் மாத்திரமே சேவைக்கு அழைக்கப்பட வேண்டும் என மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற அமைச்சு அறிவித்துள்ளது.

இதில் அந்தந்த நிறுவன பிரதானிகளினால் குறைந்தபட்ச ஊழியர்கள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஏனைய ஊழியர்கள் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நடைமுறை போன்றே வீடுகளில் இருந்து கடமைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஞா)

# யாழ். பல்கலையில் உடற்கல்வித் துறையில் பட்டப்படிப்பை ஆரம்பிக்க ஆவன செய்க
## துணைவேந்தர் நாமலிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்களில் முன்னேற்றத்தைக் காண்பதற்கு துறைசார் வல்லுநர்களை உருவாக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வித் துறையில் பட்டப்படிப்பை தொடங்குவதற்கு விளையாட்டுத் துறை அமைச்சர் தலையிட வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுடனான கிராமியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தேசிய வேலைத் திட்டத்தில் சமூக உட்கட்டமைப்புக் குழுவின் கூட்டம் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தலைமையில் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் இளைஞர்களின் எதிர்காலம் குறித்தும், போதைப் பாவனையிலிருந்து இளையோரை மீட்கும் நடவடிக்கைகள் பற்றியும் பேசிய விளையாட்டுத்துறை அமைச்சர் கூட்டத்திலிருந்தவர்களிடமிருந்து கருத்துக்களைக் கேட்ட சமயத்திலே துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார். (ஞா-33)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தொடர்ந்து குரல் கொடுப்பேன்

## வியாழேந்திரன் திட்டவட்டம்



(கொழும்பு)

**தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நான் தொடர்ந்தும் குரல்கொடுப்பேன் என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.**

கடுக்காமுனை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில்கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“இப்பொழுது சில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சில வாதப்பிரதி வாதங்களை அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நீதி அமைச்சரிடம் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கேட்டதை கேலிக்கூத்தாக எடுத்து பேசி வருகின்றமையை ஊடகங்கள் வாயிலாக எம்மால் அறிய முடிகின்றது.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதியிடம் பேசலாம், பிரதமரிடம் பேச லாம், நீதி அமைச்சரோடும் பேசவேண்டும். கைதிகளின் விடுதலை தொடர்பில் நிதி அமைச்சருக்கும் பங்கு இருக்கின்றது. அவர் நாட்டினுடைய நீதித்துறைக்கு பொறுப்பானவர்.

300க்கும் மேற்பட்ட உயிர்கள் பயங்கரவாத தாக்குதலால் கடந்த ஏப்ரல் 21 இல் வெடித்து சிதறிப் பலியாகினர். அந்தப் பயங்கரவாதத்தை தடுக்காமல் இருந்த அரசாங்கத்தை, மக்கள் விடுதலை முன்னணியினர் அந்நேரத்தில் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வந்த போது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை பாதுகாத்த பெருமை எங்களுடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களையே சாரும்.

ஒவ்வொரு முறையும் அரசாங்கத்திற்கு வாக்களிக்கும் பொழுதும், அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்திற்கு வாக்களிக்கும் பொழுதும், பத்து அல்லது 20 அரசியல் கைதிகளை விடுதலை செய்தால் தான் வாக்களிப்போம் என்ற நிபந்தனைகளை முன்வைத்து இருந்தால் கடந்த 4, 1/2 வருடங்களில் பல்வேறுபட்ட பிரச்சினைக்கான தீர்வினை கடந்த அரசாங்கத்திடமிருந்து எமது தமிழ் மக்களுக்காக பெற்றுக் கொடுத்திருக்க முடியும்” என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# எதிர்வரும் இரண்டு வாரங்கள் மிகவும் தீர்க்கமானவை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு வாரங்கள் என்பது மிகவும் தீர்க்க மானவை என்பதை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும் என இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ்தொற்று பரவலை கட்டுப்படுத்த, தேவையேற்படின் ஏனைய பகுதிகளையும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தத் தயாராகவே உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்ட பிரதேசங்களில் உணவு உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள அனுமதி அளிக்கப்படும்.

வைத்தியர்கள், சுகாதார அதிகாரிகள், பொலிஸாருக்கு இது தொடர்பாக அறிவித்துள்ளோம்.

கொரோனா தொடர்பாக உன்னிப்பாக அவதானித்தே, நாம் சில பகுதிகளை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளோம்.

எதிர்காலத்தில் இன்னும் சில பகுதிகளையும் தனிமைப்படுத்த வேண்டிய தேவையேற்பட்டால், அதனையும் நிச்சயமாக நாம் மேற்கொள்வோம். இந்த விடயத்தில் பொது மக்கள்தான் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும்.

முடிந்தளவு தேவையற்ற பயணங்களை மக்கள் குறைத்துக்கொள்ள வேண்டும். எதிர்வரும் இரண்டு வாரங்கள் என்பது மிகவும் தீர்க்கமானவை என்பதை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்” என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# போக்குவரத்தை வரையறுக்காமல் ஊரடங்கை நீக்குவது எச்சரிக்கையே

(கொரோனா)

மேல் மாகாணத்தில் கொரோனா அச்சுறுத்தல் அதிகம் இருக்கும் பிரதேசங்களை இனங்கண்டு, அந்தப் பிரதேசங்களுக்கான போக்குவரத்தை வரையறுக்க முறையான வேலைத்திட்டம் ஏற்படுத்தவேண்டும். அதன் பின்னரே தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். எந்த ஆய்வும் மேற்கொள்ளாமல் செயற்படுவதால் கொரோனாத் தொற்று நாடுபூராகவும் பரவும் அபாயம் இருக்கின்றது என அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் முன்னாள் செயலாளர் வைத்தியர் ஹரித் அளுத்கே குறிப்பிடுகையில், மேல் மாகாணத்தில் இரண்டு வாரங்களாக அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது.



மேல் மாகாணத்தை முற்றாக முடக்கவேண்டும் என்பது எமது நிலைப்பாடு அல்ல. என்றாலும் கொரோனா எச்சரிக்கை அதிகம் இருக்கும் பிரதேசங்கள் தொடர்பாக அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக கொழும்பு மாநகர எல்லை பிரதேசத்தில் கடந்த ஒருவாரத்தில் அதிகளவான நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதுடன் அதிகளவான மரணங்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான பிரதேசங்களை இனம்கண்டு, அந்த பிரதேசங்களுக்கான போக்குவரத்தை வரையறுக்க முறைமையொன்றை ஏற்படுத்தவேண்டும்.

அவ்வாறு இல்லாமல் எந்த வித ஆய்வும் இல்லாமல் மேல் மாகாணத்தில் ஊரடங்குச் சட்டத்தை நீக்குவதானால் கொரோனாத் தொற்று நாடு பூராகவும் பரவும் அபாயம் இருக்கின்றது.

அத்துடன் நாட்டின் பல பிரதேசங்களில் இருந்தும் புதிதாக கொரோனாத் கொத்தணிகள் உருவாகி இருக்கின்றன. கைத்தொழிற்சாலைகள், பொலிஸாரினால் ஏற்பட்டிருக்கும் கொத்தணி 350 பேரை தாண்டி இருக்கின்றது. சிறைச்சாலையில் இருந்தும் கொத்தணி உருவாகி இருக்கின்றது.

அதனால் புதிதாக உருவாகும் கொத்தணிகளை நாங்கள் எந்தளவுக்கு கட்டுப்படுத்துகின்றோம் என்பதன் அடிப்படையிலே எதிர்காலத்தில் நாட்டை முற்றாக முடக்குவதா? அல்லது சாதாரண மனித வாழ்க்கையைக் கொண்டு செல்லும் வகையில் ஊரடங்கு சட்டத்தை இலகுபடுத்துவதா? என்பது தொடர்பில் தீர்மானிக்க முடியும் என்றார். (ஜ-4)

# மைதானத்தைக் கோரி வவுனியாவில் கவனயீர்ப்பு



(நெளுக்குளம்)


வவுனியாவில் தேசிய ரீதியிலான கிரிக்கெட் மைதானத்தினை அமைக்க விவசாய பண்ணையின் மேட்டு நிலப் பகுதியை பெற்றுத்தருமாறு கோரி வவுனியா மாவட்ட கிரிக்கெட் ஆர்வலர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டமொன்றை நடத்தினர்.

வவுனியா யாழ்.வீதியில் விவசாய பண்ணைக்கு முன்பாக கொட்டும் மழைக்கு மத்தியில் இடம்பெற்ற இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் “எதிர்கால சந்ததிக்காகவாவது மைதானம் வேண்டும்.

“இந்தக்காணியை மைதானத்திற்காக தா” “வவுனியாவிற்கு சொந்த கிரிக்கெட் மைதானம் வேண்டும்” போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

இன்று திங்கட்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் விளையாட்டுத்துறை தொடர்பாக கலந்துரையாடுவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வருகை தரவுள்ள நிலையிலேயே இக் கவனயீர்ப்பு போராட்டமும் இடம்பெற்றுள்ளது. (ஜ-4-299)

# கொரோனாவின் பாரதூரத்தன்மையை அரசாங்கம் மறைக்கின்றதா? - ஜே.வி.பி.



(கொழும்பு)

கொரோனா நோய்த் தொற்று இரண்டாம் அலையின் பாரதூர தன்மையை அரசாங்கம் மூடி மறைக்கின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா அலையின் பாரதூரத்தன்மையை அரசாங்கம் புரிந்து கொள்ளவில்லை அல்லது அதனை மூடி மறைக்கின்றது என்றே கருத வேண்டியுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த மார்ச் மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையில் மூவாயிரம் நோயாளிகள் பதிவாகியிருந்த போதிலும் கடந்த ஒருமாத காலப் பகுதியில் பத்தாயிரம் நோயாளிகள் பதிவாகியிருந்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் ஏழு மாதங்களில் மூவாயிரம் தொற்றாளிகள் பதிவானதுடன் ஒரு மாத காலப் பகுதியில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும் இது பாரதூரமான ஓர் நிலைமை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதலாம் அலையின் போது நோயாளிகள் குறிப்பிட்ட இடங்களிலிருந்து பதிவாகியிருந்தனர் என்ற போதிலும் இம்முறை அவ்வாறு இல்லாமல் பல்வேறு இடங்களிலும் நோயாளிகள் பதிவாகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# மத்திய நிலையமாக கரந்தெனிய

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான மத்திய நிலையமாக காலி கரந்தெனிய மாவட்ட வைத்தியசாலை மாற்றப்பட்டுள்ளது.

சாதாரண நோயாளர்களுக்குத் தனியாகவும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்குத் தனியாகவும் இங்கு சிகிச்சையளிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# புகையிரதத்தை நிறுத்தாமல் பயணிக்க தீர்மானம்

(கொழும்பு)

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட பொலிஸ் பிரிவுகளில் புகையிரதத்தை நிறுத்தாமல் பயணிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இன்று காலை மற்றும் மாலை அலுவலக புகையிரதங்கள் கடமையில் ஈடுபடவுள்ளன. (ஜ-4)

# வெலிக்கடை சிறையில் மேலும் 7 பேர் அடையாளம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் நேற்று முன்தினம் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் கொரோனா நோயாளர்கள் ஏழு பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தொற்று அடையாளம் காணப்பட்டவர்களையும் வெலிகந்த வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இந்த ஏழு பேரும் சிகிச்சை பெற்ற ஜீ வார்ட்டில் தங்கியிருப்பவர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கூடுதலான கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் புனானை விசேட சிகிச்சை நிலையத்தின் சேவைகள் மேலும் விஸ்தரிக்கப்படுகின்றன. இங்கு இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தொற்றாளர்கள் சிகிச்சை பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மின் விநியோகம் தடைப்படாது

(கொழும்பு)

மேல்மாகாண மின்பாவனையாளர்கள் மாத மின் கட்டணத்தை செலுத்த தாமதம் ஏற்பட்டாலும் மின் விநியோகம் துண்டிக்கப்படமாட்டாது என மின்சார சபை அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளதாவது. கடந்த மாதம் 4 ஆம் திகதி கம்பஹா மாவட்டத்தில் ஒரு சில பிரதேசங்களிலும், அதே மாதம் மேல்மாகாணத்திற்கும் ஊரடங்கு சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டது.

மேல்மாகாணத்தில் உள்ள மின்பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் மாத மின்கட்டணத்தை செலுத்த காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முன்னெடுக்கும் செயற்பாடுகளில் மின்சாரம் அதிகளவில் பாவிக்கப்படுவதால் மின் பாவனைக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

ஆகவே பொது மக்கள் மின்சாரத்தை சிக்கனமான முறையில் பயன்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## குருகுலம் தொலைக்காட்சி நிகழ்ச்சி நேரஅட்டவணை தமிழ்மொழி மூலம்

# மாகாண கல்வி திணைக்களம் - வடக்கு மாகாணம்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| | 09.11.2020 | 10.11.2020 | 11.11.2020 | 12.11.2020 | 13.11.2020 | 14.11.2020 | 15.11.2020 |
| 4.00-5.00 | A/L இணைந்த கணிதம்-L19 | | A/L உயிரியல்-L42 | | A/L கணக்கியல்-L36 | | A/L வணிகம்-L24 |
| 5.00-6.00 | | A/L பொருளியல்-L28 | | A/L பௌதீகவியல்-L45 | | A/L இரசாயனவியல்-L45 | |
| 6.00-7.00 | | | O/L ஆங்கிலம்-L43,44 | | | | A/L ICT-L37 |
| 8.00-9.00 | A/L விவசாய விஞ்ஞானம்-L09 | | A/L வணிகம்-L22 | | A/L BST-L09 | A/L தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்-L43 | |
| 9.00-10.00 | | A/L பொறியியல் தொழில்நுட்பம்-L10 | | A/L தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்-L09 | | | O/L ஆங்கிலம்-L76,L77 |
| 10.00-11.00 | A/L ICT-L10 | | A/L அரசியல் விஞ்ஞானம்-L11 | | A/L பொருளியல்-L30 | A/L இணைந்த கணிதம்-L58 | |
| 11.00-12.00 | | A/L புவியியல்-L11 | | A/L இணைந்த கணிதம்-L20 | | | A/L பொறியியல் தொழில்நுட்பம்-L42 |
| 12.00-13.00 | A/L கணக்கியல்-L34 | | A/L பொருளியல்-L29 | | A/L பௌதீகவியல்-L46 | A/L அரசியல் விஞ்ஞானம்-L41 | |
| 13.00-14.00 | | A/L இரசாயன வியல்-L43 | | A/L உயிரியல்-L43 | | | A/L பொருளியல்-L56 |
| 14.00-15.00 | A/L தமிழ்-L12 | | | | A/L வணிகம்-L23 | A/L விவசாய விஞ்ஞானம்-L39 | |
| 15.00-16.00 | A/L இரசாயன வியல்-L57 | | A/L பௌதீகவியல்-L62 | | A/L உயிரியல்-L56 | O/L கணிதம்-LIVE | O/L விஞ்ஞானம்-LIVE |
| 16.00-17.00 | | A/L வணிகம்-L57 | | A/L கணக்கியல்-L58 | | | |
| 17.00-18.00 | Gr5 கணிதம்-(SLRC) | O/L கணிதம்-(SLRC) | O/L கணிதம்-(SLRC) | Gr5 மொழி-(SLRC) | Gr5 கணிதம்-(SLRC) | | |
| 22.00-23.00 | A/L உயிரியல்-L41 | | A/L கணக்கியல்-L35 | | A/L இணைந்த கணிதம்-L21 | | A/L உயிர் அமைப்பு தொழில்நுட்பம்-L41 |
| 23.00-24.00 | | A/L பௌதீகவியல்-L44 | | A/L இரசாயனவியல்-L44 | | A/L தமிழ்-L50 | |



நாட்டில் வாழுகின்ற மக்கள் அனைவரும், கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக, அருளாசி வேண்டி வவுனியா, இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆலய பங்கு தந்தை ஜெயபாலன் அடிகளார் தலைமையில் விசேட திருப்பலி ஆராதனைகள் நேற்று இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், மாவட்ட அரச அதிபர் சமன்பந்துல, பொலிஸ் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படம்:- வசந்தரூபன்)

# தமிழகத்தைச் சேர்ந்த 4 பேர் உட்பட

# 6 பேர் மஞ்சளுடன் கைது

(பனிக்கன்குளம்)

3 ஆயிரம் கிலோ சமையல் மஞ்சளுடன் தமிழகத்தை சேர்ந்த 4 பேர் உட்பட 6 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு கடற்படையினர் தலை மன்னாருக்கும் புத்தளம் கல்பிட்டி பகுதிக்கும் இடையே கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். அப்போது நடுக்கடலில் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற தமிழகத்தைச் சேர்ந்த நாட்டு படகு ஒன்றை சோதனை செய்ததில் படகில் தமிழகத்தில் இருந்து கடத்தி வரப்பட்ட சமையல் மஞ்சள் மூட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. இதனையடுத்து கடற்படையினர் படகையும் படகில் இருந்த தமிழகத்தைச் சேர்ந்த நால்வரையும் கைது செய்தனர்.

இந்த நிலையில் புத்தளம் மாவட்டம் குதிரை மலை பகுதியைச் சேர்ந்த பைப்பர் படகு ஒன்று நடுக்கடலில் இலங்கை கடற்படையின் ரோந்து படகை கண்டதும் படகில் இருந்த இருவர் கடலில் குதித்து நீந்த தொடங்கியுள்ளனர். இதனை கண்ட கடற்படை கடலில் குதித்த சந்தேக நபர்களை கைது செய்து பைப்பர் படகையும் கைப்பற்றினர்.



கைதானவர்களை புத்தளம் கல்பிட்டி கடற்படை முகாமிற்கு அழைத்துச்சென்று அவர்களிடம் விசாரணை நடத்தினர்.

கடற்படை நடத்திய முதல் கட்ட விசாரணையில் தூத்துக்குடி மாவட்டம் கீழ வேம்பார் கடற்கரையில் இருந்து நாட்டு படகு ஒன்றில் வேம்பார் பகுதியைச் சேர்ந்த அந்தோனி கின்பன், பொன்னு, ஜின்சில் யாஸ், ஜவமாலிக் சுபாஷ் ஆகிய நால்வரும் சட்டவிரோதமாக சமையல் மஞ்சள் மூடைகளை கடத்தி வந்து புத்தளத்தை சேர்ந்த நபர்களிடம் ஒப்படைக்க நடுக்கடலில் காத்திருந்த போது இலங்கை கடற்படையினரிடம் சிக்கிக்கொண்டதாகவும் அதே போல் தமிழகத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மஞ்சள் மூடைகளை வாங்குவதற்காக புத்தளத்தில் இருந்து படகில் வந்த போது கடற்படை தமிழகத்தை சேர்ந்தவர்களை கைது செய்ததைக் கண்டதும் கடற் படையினரிடம் இருந்து தப்பிக்க கடலில் குதித்ததாக புத்தளத்தைச் சேர்ந்த இருவர் தெரிவித்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட மஞ்சள் 3 ஆயிரத்து 224 கிலோ எனத் தெரிவித்தனர். மேலும் கைது செய்யப்பட்ட 6 பேருக்கு கொரோனாத் தொற்றுப் பரிசோதனை செய்யப்பட்டு தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தலின் பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். (5-4-281)

# குணமடைந்தோர் 7723

(கொழும்பு)

நாட்டில் கொரோனாத தொற்றில் இருந்து கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 562 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 7 ஆயிரத்து 723 ஆக அதிகரித்துள்ளது.

5 ஆயிரத்து 100 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 297 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர். மேலும் நாட்டில் கொரோனாத் தொற்றினால் இதுவரை 34 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)


60 மாதங்கள் நிறைவில்
உங்கள் நினைவுகள் சுமந்து

17 . 04 . 1971

05 . 11 . 2015



திருமதி நிகிலா சுதர்ஷன்

(திதி. அபரபக்க நவமி - 09.11.2020)

எம் இருவர் பெயர் அழைத்து, உம் கரம்தனில் இருந்தாறி
அன்பின் இனிமையில் துன்பம் சாராது,அருகில் நடந்து
எமைக்காத்த அம்மா இன்று உமைப் பார்ப்பதேனும் நிஜம் தானோ?
மனம் எண்ணும் கனாதானோ இன்றறிய திங்கள் அறுபதாயினும்
சுமந்திருந்த பத்துத் திங்கள் அம்மாவில் வளர்ந்தாகிய எம்மில்
உமை நிலைநிறுத்தி நீங்கள் கண்ட கனவுதனை சென்றடையும்
எண்ணத்தில் வாழும் எம் வாழ்க்கை அர்த்தமுடையதாக
உமது ஆசியில் எமைக் காத்தருளும்...

(4071)

302, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

கணவர்,
கண்மணிகள்



31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்

தோற்றம்
12
04
1949



மறைவு
10
10
2020

அமரர்.திரு. இளையதம்பி கந்தவனம்

[பழைய மார்க்கெட், சரஸ்வதி ஸ்ரோஸ் உரிமையாளர்,நெல்லியடி]

கடந்த 10.10.2020 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் இளையதம்பி கந்தவனம் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (09.11.2020) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று அஸ்தி கரைக்கப்படும். அன்றைய தினம் சபிண்டீகரண கிரியை வீட்டில் நடைபெறும். அத்துடன் அன்னாரின் இறப்பு நிகழ்வில் கலந்து கொண்டோர், துயர் பகிர்ந்தோர், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வழங்கியோர், உதவிகள் வழங்கிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

(C-640)

முருகமூர்த்தி வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

தொடர்புக்கு:
077 658 9013

தகவல்:
குடும்பத்தினர்.

# சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

வீட்டுப் பொருளாதாரம், போசணையை மேம்படுத்தி குடும்ப அலகுகளை வலுவூட்டும் தேசிய வீட்டுத் தோட்ட செயற்றிட்டத்தின் அடிப்படையில் மரக்கன்றுகளை வழங்கும் சுபீட்சத்தின் நோக்கு திட்ட நிகழ்வை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணம் சமுர்த்தி வங்கியில் ஆரம்பித்து வைத்துள்ளார்.

நாடு முழுவதும் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிலையில் நேற்று முன்தினம் யாழ்.பிரதேச செயலாளர் எஸ். சுதர்ஷன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வை அமைச்சர் டகளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

இதில் கருத்து தெரிவித்த அமைச்சர், மிகச் சிறிய அளவில் சுய தேவைப் பூர்த்தி. வீட்டுச் செலவுகளைக் குறைத்தல், சேமிப்பு தூண்டலுக்கான வாய்ப்பு, நஞ்சற்ற காய்கறி பழங்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு என்பவற்றின் பொருட்டு நாற்றுக்கள், விதைகள், பழமரக் கன்றுகள் என்பன வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேசிய ரீதியான இந்தத் திட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் இந்நிகழ்வை ஆரம்பித்து வைப்பதில் மகிழ்வடைகின்றேன். அத்துடன் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தோறும் 210 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின்மூலம் அவர்கள் சிறந்த பயன்களை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட பணிப்பாளர் தி. விஸ்வரூபன், சிரேஷ்ட சமுர்த்தி ஆணையாளர் ஆ.இரகுநாதன், வங்கி முகாமையாளர் சி. பிரதீபன், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதனிடையே யாழ். நகர பழக்கடைப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் , பழக்கடை வியாபாரிகள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்ததுடன் அவற்றுக்கு நியாயமான தீர்வை பெற்றுத் தருவதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4)

# யாழ்.பல்கலையில் உள்ளக விளையாட்டரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பிரமாண்டமான உள்ளக விளையாட்டு அரங்கு எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

நாட்டில் தற்போது எழுந்துள்ள கொவிட்-19 நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, சுகாதார நடைமுறைகளுக்கமைய மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் இந்தத் திறப்பு விழாவை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், நிகழ்வுகளை நேரலையாக ஒலிபரப்புவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

தற்போதைய துணைவேந்தரும் முன்னாள் விஞ்ஞான பீடாதிபதியுமாகிய பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, இலங்கை பல்கலைக்கழக விளையாட்டு விழாவுக்கான ஏற்பாட்டுக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட காலத்தில் முன்வைக்கப்பட்ட திட்ட முன்மொழிவுக்கமைய 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணத்தினால் அடிக்கல்நாட்டப்பட்டிருந்தது. நிறைவு செய்யப்பட்ட கட்டடத் தொகுதி 2020 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஆயிரம் பேர் ஒரே நேரத்தில் அமர்ந்திருக்கக் கூடிய வசதியைக் கொண்டுள்ள இந்த உள்ளக விளையாட்டரங்கு சர்வதேசத்தர நியமங்களுக்கமைய அமைக்கப்பட்டிருக்கிறது.

பேராதனை மற்றும் ருகுண பல்கலைக்கழகங்களில் உள்ளக விளையாட்டரங்குகள் காணப்படுகின்ற போதிலும் இலங்கையில் வேறெந்தப் பல்கலைக் கழகங்களிலும் இத்தகைய வசதிகளைக் கொண்ட உள்ளக விளையாட்டரங்கு இதுவரை அமைக்கப்படவில்லை.

சுமார் இருநூற்றி எட்டு மில்லியன் ரூபாய் செலவில் இந்த விளையாட்டரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மைதானத்தின் தென்கிழக்கு மூலையில் அமைக்கப்பட்டுள்ள இந்த உள்ளக விளையாட்டரங்கின் திறப்பு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளர் கே.கணேசநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினரும், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் கல்வெட்டைத் திறந்து வைக்க, யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா உள்ளக விளையாட்டரங்கைத் திறந்து வைக்கவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மட்டுமல்லாமல், தேவை நாடும் சகலரும் இந்த உள்ளக விளையாட்டரங்கைப் பயன்படுத்துவதற்கேற்ற முறையில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உடற்கல்வி அலகுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து, அனுமதி பெற்று இங்குள்ள உள்ளக விளையாட்டு வசதிகளை விளையாட்டுத்துறை சார்ந்தோர் பயன்படுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கின் இடப்பற்றாக் குறை காரணமாகப் பல அமர்வுகளாக நடத்தப்படும் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவினை இம்முறை ஒரே நாளில் இந்த அரங்கில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (5-4-33)

# எமது வளங்கள் எமது மக்களுக்கே பிரதேச சபை உறுப்பினர்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெற்று வருகின்ற பாரிய வீதி அபிவிருத்திப் பணிகளின் போது எஞ்சுகின்ற மண்ணை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சேதமடைந்த வீதிகளைச் செப்பனிடப் பயன்படுத்த வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே உறுப்பினர்கள் இதனை வலியுறுத்தி இருந்தனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

சபை எல்லைக்குள் இடம் பெறுகின்ற பாரிய வீதி அபிவிருத்திப் பணிகளின்போது எஞ்சுகின்ற மண்ணை சாவகச்சேரி பிரதேச சபையிடம் தான் வழங்க வேண்டும்.

ஆனால் இங்கு அப்படி நடப்பதில்லை. மாறாக மண் வியாபாரம் இடம்பெறுகிறது. எமது பிரதேச மண் வீதி அபிவிருத்தியில் ஈடுபடுபவர்களால் எமது பகுதி மக்களுக்கே விற்கப்படுகிறது.


சபை எல்லைக்குட்பட்ட கச்சாய் வரணி உள்ளிட்ட பிரதேசங்களில் பல வீதிகள் மாரி காலத்தில் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே வீதி அபிவிருத்திப் பணிகளின் போது எஞ்சுகின்ற மண்ணை இவ்வாறான சேதமடைந்த வீதிகளை செப்பனிட பயன்படுத்த வேண்டும்.

அத்துடன்எமது வளத்தினை எமது மக்களுக்கே விற்கும் செயற்பாடு அடியோடு நிறுத்தப்பட வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர். (5-4-30)



**சாவகச்சேரி லயன்ஸ் கழகமும், தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகமும் இணைந்து அண்மையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு ஒரு தொகை கொரோனா தற்காப்புப் பொருட்களை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் திருமதி டயாழினியிடம் வழங்கினர். இந் நிகழ்வில் லயன்ஸ் கழக பிராந்தியத் தலைவர் லயன் கு.பிரணவராசா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.**



**மல்லாகம் புனித சதாசகாய மாதா இளையோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நடமாடும் இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் சதாசகாய மாதா ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. இம்முகாமில் 43 இளைஞர்கள் குருதிக் கொடை வழங்கினர். (படங்கள்:-ரவிசாந்)**

# மழையுடனான காலநிலை நீடிக்கும்



(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறும் பொதுமக்களுக்கு குறித்த திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ-4)

# டெங்கு நோயாளிக்கு கொரோனா

(கொழும்பு)


நாட்டில் முதன் முறையாக டெங்கு காய்ச்சலுக்கு உள்ளானவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

இவ்வாறு இனங்காணப்பட்டவர் பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புடையவர் என அவ்வைத்தியசாலையின் டெங்கு பிரிவின் தலைவர் வைத்தியர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

குறித்த நபருக்கு ஏற்பட்ட அதிக காய்ச்சல் காரணமாக வைத்தியசாலைக்கு வருகை தந்துள்ளார். அதனைத் தொடர்ந்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட இரத்த பரிசோதனையின் பின்னர் அவருக்கு டெங்குக் காய்ச்சல் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

அதன் பின்னர் அவருக்கு தொடர்ந்தும் ஏற்பட்ட காய்ச்சலினால் 5ஆம் நாள் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் வைத்தியர் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# கொரோனா நீங்க ஹோமம்



(மட்டக்களப்பு)

கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஸ்ரீமத் ஹோமம் நடத்தப்பட்டது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள வேண்டுகோளின் அடிப்படையில் பௌத்த மத விவகார புத்த சாசன அமைச்சு மற்றும் இந்து கலாசார திணைக்களம் ஆகியவற்றின் ஒழுங்கமைப்பில் இந்த மகா ஹோமம் நடத்தப்பட்டது.

இந்த நாட்டில் இருந்து கொரோனாத் தொற்று நீங்கி நாடு சுபீட்சமான காலத்தினை அடையவேண்டும் என இதன்போது பிரார்த்தனை செய்யப்பட்டது. (ஐ-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

"இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்"
L.E.D TV REPAIRING COURSE (L.E.D தொலைக்காட்சி திருத்தும் பயிற்சி)
மூன்று மாதங்களுக்குள் 12 வகுப்புகள்.
தொலைக்காட்சிப் பெட்டி உபகரணங்கள் மூலம் செயன்முறை செய்து பயிற்சி அளித்தல்.
ஆரம்பம்:- 2020.11.15 காலை 9.00 மணிக்கு
தொடர்பு:- HAPPY HOLI DAY INN. K.K.S. றோட் மல்லாகம், பெற்றோல் செட் முன்பாக...
தொ.பேசி.இல:- 0765884170, 0710934705, 0212241283
Regd No:- Pv61562
(4517)

உடனடி தேவை
எமது ஸ்தாபனத்தில் வீட்டுத்தோட்ட முறைய்ய கிராமங்கள் தோறும் அறிமுகப்படுத்தும் விற்பனை முகவர்கள் உடனடியாகத் தேவை. உங்களது வீட்டில் இருந்து உங்கள் கிராமத்திலேயே இம்முகவர்வேலையை செய்ய முடியும் மாதங்கள் நிறைய வருமானம் பெற்றுக்கொள்ள முடியும். உங்கள் சுயவிபரக்கோவையை கீழ்க்காணும் முகவரிக்கு 12.11.2020 இற்கு முன்பாக அனுப்பி வைக்கவும்.
ORGANIC HOME GARDEN CENTRE
விதானையார் ஒழுங்கை, உரும்பிராய்.
(உரும்பிராய் சந்தியில் இருந்து மருதனார்மடம் செல்லும் வீதி வழியாக) (4492)
Contact us
076 769 9191

## அறிவித்தல்

### பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்
### மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்.

வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார்) தரம் III மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (குடிசார் மற்றும் படவரைஞர்) பயிற்சித் தரம் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020 தமிழ் மற்றும் சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2020.12.09 ஆகும்.

விண்ணப்பதாரிகள் **www.np.gov.lk→ Recruitment and Exam→ Advertisement** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான விபரங்களை பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

சி.திருவாகரன், செயலாளர்,
மாகாணபொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

(C-650)

## போதனா வைத்தியசாலை-யாழ்ப்பாணம்

### வாகன சுத்திகரிப்புச் சேவைகளிற்கான கேள்வி விலை கோரல் - 2021

01. யாழ் போதனா வைத்தியசாலை பெறுகைக்குழுவின் தலைவரினால் 2021 ஆம் வருடத்திற்கான யாழ்.போதனா வைத்தியசாலை வாகனங்களிற்கு சுத்திகரிப்புச் சேவையினை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள்/ஒப்பந்தக்காரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
02. கேள்வி மனுதாரர் வாகன சுத்திகரிப்புச் சேவைக்குரிய வியாபார அனுமதிப் பத்திரத்தின் பிரதியுடன் கேள்வி அனுமதிக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 1000.00 ஐ யாழ்.போதனா வைத்தியசாலை அலுவலக காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் தேசிய அடையாள அட்டையையும் சமர்ப்பித்து கேள்வி விண்ணப்பங்களை 2020.11.10 முதல் 2020.11.24 வரை மு.ப 9.00-பி.ப3.00 மணிவரை யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியசாலை அலுவலக அறையில் பெற்றுக் கொள்ளலாம்.
03. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக **(Bid Bond)** ரூபா 50.000.00 ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
04. கேள்வி விண்ணப்பங்களின் மூலப்பிரதியினை தயார் செய்து தபாலுறையிலிட்டு முத்திரை பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் **"வாகன சுத்திகரிப்புச் சேவைகளிற்கான கேள்வி விலை கோரல் -2021"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
05. பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்களை 2020.11.25 திகதி மு.ப 10..00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை,யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது யாழ்.போதனா வைத்தியசாலை கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ கிடைக்கச் செய்தல் வேண்டும்.
06. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவுற்ற உடனேயே அவை அவ்விடத்திலேயே திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.
07. கேள்வி ஆவணங்களை யாழ்.போதனா வைத்தியசாலை அலுவலக அறையில் இலவசமாக பார்வையிடலாம்.
08. அரசாங்க ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களுக்கு கேள்வி ஆவணங்கள் வழங்கப்படமாட்டாது.
09. குறித்த கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவைச்சார்ந்தது.
10. மேலதிக விபரங்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியசாலைச் செயலாளரை 021 222 7351 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(C-649)

# கிளினிக் நோயாளர்களுக்கான மருந்துகளை வீடுகளுக்குச் சென்று வழங்க நடவடிக்கை

(குருமன்காடு)

வவுனியா வைத்தியசாலையில் பதிவு செய்துள்ள கிளினிக் நோயாளர்களிற்கான மருந்துகளை அவர்களது வீடுகளிற்கே கொண்டு சென்று வழங்கும், வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ரி.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

தற்போதைய நெருக்கடியான சூழலில் வைத்தியசாலைக்கு வருகைதரும் மக்களின் தொகையை மட்டுப்படுத்தும் நோக்குடன் மத்திய சுகாதார அமைச்சின் DGHS/COVID 19/347/2020 (III) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அஞ்சல் திணைக்களத்தின் ஊடாக அரச வைத்திய சாலையில் பதிவுசெய்துள்ள நோயாளர்களுக்கான மருந்து வகைகளை அவர்களது வீட்டிற்கே கொண்டு சென்று வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அந்தவகையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கிளினிக்கில் பதிவு செய்து தற்போதைய சூழ்நிலையில் நேரடியாக வந்து மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியாத பொது கிளினிக் நோயாளர்கள் 0740104936 என்ற தொலைபேசி இலக்கத்துடனும், பொது வைத்திய நிபுணர்களிற்கான கிளினிக் நோயாளர்கள் (VP OPD) 0761001936 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் காலை 8 மணிதொடக்கம் மாலை 4 மணிவரை தொடர்பு கொண்டு நோயாளரின் பெயர், தற்போதைய வதிவிட முகவரி, கிளினிக் பதிவு இலக்கம், பாவனையிலுள்ள தொலைபேசி இலக்கம், வீட்டிற்கு அருகாமையிலுள்ள தபால் கந்தோரின் விலாசம் ஆகிய தகவல்களை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதேவேளை நோயாளர்கள் தங்களின் கிளினிக் தினத்தின், முதல் வாரத்தின் புதன் கிழமைகளில் தங்களுக்குரிய மருந்துகளை பொதி செய்து அஞ்சல் திணைக்களத்தில் சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக தங்களுடைய விபரங்களை திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் மேற்குறித்த தொலைபேசியினூடாக அறியத்தருமாறும் கேட்டுக்கொண்டார்.

தொலைபேசியூடாக அறியத்தர முடியாதவர்கள், தங்கள் கிராம உத்தியோகத்தர் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர் ஊடாக மேற்படி விபரங்களை அறியத்தருமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

வைத்தியரின் ஆலோசனையினை நேரடியாகப் பெற வேண்டும் என கருதும் நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வழமை போன்று சமுகமளித்து வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (5-4-250-299)

# வவு. வைத்தியசாலை சுற்றுவட்டத்தில் புதிய போக்குவரத்து நடைமுறை


(குருமன்காடு)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு செல்லும் பிரதான பாதையில் ஏற்படும் வாகன நெரிசலை கட்டுப்படுத்தும் நோக்கில் வவுனியா போக்குவரத்து பொலிஸாரினால் புதிய போக்குவரத்து நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு செல்லும் பிரதான பாதையில் வாகன நெரிசல் ஏற்படுவதனால் அவசர தேவைகளின் போது நோயாளர் காவு வண்டி செல்வதற்கு கூட கடினமான நிலை காணப்பட்டது.

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் வவுனியா போக்குவரத்து பொலிஸாரினால் வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியினுள் சிறிய மற்றும் பாரிய ஊர்திகள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியுடனான வாகனத்தடை தொடர்பான சமிக்ஞையும் வவுனியா நகர சுற்றுவட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (5-4-250)



கிளிநொச்சி மாவட்டத்தில் சாந்தபுரம் பகுதியில் கொவிட்-19 காரணமாக தனிமைப்படுத்தப்பட்டு உள்ள 21 குடும்பங்களுக்கு உள்ள சமூக செயற்பாட்டாளர் சுப்பிரமணியம் கதிர்காமநாதனின் நிதியுதவியில் ஒரு மாதத்திற்கு தேவையான உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன. (படம்-நிபோஜன்)

# பனம் விதை நாட்டும் திட்டத்தின் 3 ஆம் கட்டம் முல்லையில் ஆரம்பம்

(பனிக்கன்குளம்)

இயற்கையை பாதுகாத்து பசுமையான சூழலை உருவாக்குவது இன்றைய காலத்தின் தேவையாகும். அந்த வகையில் ஐக்கிய இராச்சியம், கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பினால் கற்பகா திட்டத்தின் கீழ் ஒரு மில்லியன் பயன் தரும் விதைகள் தாயக நிலத்தில் என்கின்ற தொனிப் பொருளில் இடம்பெறுகின்ற மர நடுகைத் திட்டத்தின் மூன்றாம் கட்டமாக ஏற்பட்டுள்ள 5000 பனம் விதைகளை நாட்டும் திட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது



கிளிநொச்சி சமூக அபிவிருத்தி பேரவை மற்றும் கரை துறைப்பற்று பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஆகிய வற்றின் ஏற்பாட்டில் இந்த விதை நடுகைத் திட்டத்தின் மூன்றாம் கட்டம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு அருகே உள்ள நந்திக்கடல் கடற்கரையோரத்தில் 250 பனம் விதைகள் நாட்டி ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது நாட்டில் கொரோனாத் தொற்று நிலமைகளை கருத்தில் கொண்டு சுகாதார நடைமுறைகளை பேணியவாறு ஒட்டுசுட்டான் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பா.ஜெகஜீவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, கரைதுறைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் வே.சிறீராம், கரை துறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள், கரை துறைப்பற்று பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் திருநீபன் புதுக்குடியிருப்பு பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவரஞ்சன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத்தீவு மாவட்ட உதவிப்பணிப்பாளர் திருமதி சரோஜா குகனேசதாசன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கக்கிளை உறுப்பினர்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட சமூக அபிவிருத்தி பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-281)

# மின்னிணைப்பு, வீடமைப்புக் கடன் மீளளிப்பு இரத்தாகும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மின்சார இணைப்புக்கும், வீடமைப்புக்குமென கடன்பெற்ற மக்களின் கடன் மீளளிப்பை இரத்துச் செய்வதற்கு துறைசார் அமைச்சர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் இம்முடிவை துறைசார் அமைச்சர்கள் அறிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளரும், முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான வை. தவநாதன் சார்பாக மேற்படி கூட்டத்தில் கலந்துகொண்ட மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன் இதுதொடர்பான கோரிக்கையை துறைசார் அமைச்சர்களிடம் விடுத்தபோதே அவர்கள் இந்த உறுதிமொழியை வழங்கினர்.

போரினால் பாதிக்கப்பட்டு, பொருளாதார ரீதியாக நலிவடைந்த நிலையிலுள்ள கிளிநொச்சி மாவட்ட மக்களின் நிலைமையை விசேடமாகக் கவனத்தில் கொண்டு, அவர்களுக்கு வழங்கப்பட்ட மின்னிணைப்பு மற்றும் வீடமைப்புக்கடன் மீளளிப்பிலிருந்து அவர்களை விடுவிக்குமாறு ஒருங்கிணைப்புக்குழுவின் மேலதிக இணைப்பாளர் இங்கு கோரிக்கை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது. (4-5

# வவுனியா-மன்னார்-முல்லைத்தீவு மாவட்டங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் துரித கதியில்

(குருமன்காடு)

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னியின் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நெடுஞ்சாலை துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் வவுனியா அரச அதிபர் சமன் பந்துலசேன தலைமையில் வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள வீட்டுத்திட்ட பிரச்சனைகள், வீதி அபிவிருத்தி, குளம் புனரமைப்பு, கால்வாய் கட்டுமானம், காணி உறுதிப் பத்திரம் வழங்கல், சோலர் மூலம் மின்சாரம் பெறல், கிராமிய உட்கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள்குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், அவை தொடர்பில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திகள் குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டன.

குறிப்பாக உடனடியாக 22, ஆயிரம் வீடுகள் வீடற்ற பொருத்தமான பயனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், வனவளத் திணைக்களத்தின் கீழ் உள்ள 84 குளங்களையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2500 காணி உறுதிப்பத்திரங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன. கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் வீதிகள், பாலங்கள், மதகுகள் என்பவற்றை புனரமைக்கும் நடவடிக்கைகள் துரித கதியில் மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மகாவலி எல் வலயத்தின் கீழான சேருவாவில் புனரமைப்பு உள்ளிட்ட விடயங்கள் இங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவுடன் கலந்துரையாடிய பின்னர் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (5-4-250)

## இராசிபலன்

09.11.2020
ஐப்பசி 24, திங்கட்கிழமை
நவமி பின்னிரவு 12.41 மணிவரை
மகம் பின்னிரவு 3.59 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
சந்திராஷ்டமம்:- திருவோணம்

வளவன்


மேஷம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வழிபாடு திருப்தி தரும்.


ரிஷபம்

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவராக நடப்பர்.


மிதுனம்

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கடகம்

குடும்பத்தினர் பெருமைப்படும் வகை யில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.


சிம்மம்

நண்பர்கள் ஒளிவுமறைவின்றிப் பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பச்சுமை கூடும் நாள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.


கன்னி

சுப விரயங்கள் கூடும் நாள், அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.


துலாம்

எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


விருச்சிகம்

பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், தொழில் வளர்ச்சி கூடும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


தனுசு

அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், ஆன்றோரின் சந்திப்பு இடம்பெறலாம்.


மகரம்

சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.


கும்பம்

மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவம் ஏற்படும் நாள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும்வகையில் அமையும்.


மீனம்

சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்ய முற்படுவீர்கள், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

இதயத்தை நெறிப்படுத்தும் ஆற்றல் மனதிற்கு உண்டு.

# அரிசிப் பற்றாக்குறை ஏற்படலாம்

## வர்த்தகர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள அரிசிக்கான ஆகக்கூடிய விற்பனை விலை காரணமாக நாட்டில் அரிசிக்கான பற்றாக்குறை ஏற்படலாம் என்று வர்த்தகர்கள் எச்சரித்துள்ளனர்.**




கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் அரசாங்கம் அரிசிக்கான ஆகக்கூடிய சில்லறை விலையை நிர்ணயித்தது.

இதன்படி சம்பா 94 ரூபாவாகவும், நாடு 92 ரூபாவாகவும், சிவப்பு பச்சையரிசி 89 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவேண்டும் என்று வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் அரசாங்கம் அறிவித்துள்ள ஆகக்கூடிய சில்லறை விலைக்கு குறைவாக தமக்கு அரசியை கொள்வனவு செய்யமுடியாதுள்ளதாக வர்த்தகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

உற்பத்தி மற்றும் போக்குவரத்து செலவுகளை உள்ளடக்கிய வகையில் அரசாங்கம் குறித்த விலைக்கு அரிசியை விற்பனை செய்ய முடியாது என்று வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

# அமெரிக்க ஜனாதிபதிக்கு கோட்டாபய வாழ்த்து



(கொழும்பு)

அமெரிக்காவின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜோ பிடனுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோ பிடன், 290 தொகுதிகளை கைப்பற்றி 46வது ஜனாதிபதியாகவும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ் துணை ஜனாதிபதியாகவும் பதவியேற்கவுள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வாகியுள்ள ஜோ பிடனுக்கும், துணை ஜனாதிபதியாக தேர்வாகியுள்ள கமலா ஹாரிசுக்கும் ஏனைய நாடுகளை சேர்ந்த தலைவர்கள் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

அந்தவகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் ஜோ பிடனுக்கு தனது டுவிட்டர் பக்கத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.



குறித்த வாழ்த்துச் செய்தியில் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாவது, "வரலாற்று ரீதியிலான உங்களது வெற்றிக்கு வாழ்த்துக்கள் ஜனாதிபதி ஜோ பிடன். மேலும் எமது இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த உங்களுடன் பணியாற்ற எதிர்பார்க்கின்றேன்" என பதிவேற்றியுள்ளார். (ஜ-4)

# நாட்டின் சில பகுதிகள் முடக்கம்

## கொழும்பு

(கொழும்பு)

மேல் மாகாணத்திற்குட்பட்ட சில பொலிஸ் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதற்கமைய, மட்டக்குளி, மோதரை, புளுமெண்டல், கொட்டாஞ்சேனை, கிராண்ட்பாஸ், கரையோர பொலிஸ் பிரிவு, பார்பர் வீதி, மாளிகாவத்தை, தெமட்டகொடை, வெள் ளம்பிட்டி, வாழைத்தோட்டம் மற்றும் பொரளை ஆகிய பொலிஸ் பிரிவுகள் தனிமைப் படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. (ஜ-4)

## குருநாகல்

(கொழும்பு)

குருநாகல் மாவட்டத்தின் மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகள் மற்றும் குளியாப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளன. (ஜ-4)

## கம்பஹா

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தின் வத்தளை, பேலியகொடை, கடவத்தை, ராகம, நீர்கொழும்பு, பமுனுகம, ஜா-எல மற்றும் சபுகஸ்கந்த ஆகிய பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. (ஜ-4)

## கேகாலை

(கொழும்பு)

கேகாலை மாவட்டத்திற்கு உட்பட்ட மாவனெல்ல மற்றும் ருவன்வெல்ல ஆகிய பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. (ஜ-4)

## களுத்துறை

(கொழும்பு)

களுத்துறை மாவட்டத்தின், ஹொரனை, இங்கிரிய மற்றும் மேற்கு கிராம சேவை அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (ஜ-4)

# 2021ம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## வடமாகாண சபை

வட மாகாண சபைக்குட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் மாவட்டங்களுக்கு 2021ம் ஆண்டு காலப்பகுதிக்குரிய பொருட்கள், சேவைகளை வழங்குவதற்கு உள்ளூர் வழங்குநர்களாக பதிவு செய்ய விரும்பும் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உட்பட்ட தரம் வாய்ந்த வழங்குநர்களிடமிருந்தும் உற்பத்தியாளர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக விலை குறிப்பிடல் முறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் பொருட்கள் சேவைகளுக்காக இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் வானவில் பக்கங்களில் **(Rainbow Pages)** பெயர் குறிப்பிடப்படும் வழங்குநர்களிடம் இருந்தும் விலை மனுக்கள் கோரப்படும்.

| தொகுதி இல: "G" | |
|---|---|
| உப தொகுதி இல. | பொருட்கள் - விபரம் |
| G-1 | அலுவலக தளபாடங்கள் |
| G-2 | அலுவலக உபகரணங்கள் |
| G-3 | காகிதாதிகள் |
| G-4 | ரோணர்கள் (Toners), ரிபன்கள் (Ribbion) |
| G-5 | கட்டடப் பொருட்களும் கட்டடப் பிரிவிடுதலும் (Partioning) அலங்காரமும் |
| G-6 | புத்தகங்களும், பருவ வெளியீடுகளும் |
| G-7 | மின் உதிரிகள், பொருத்திகள், மின் உபகரணங்கள் மற்றும் தொடர்பு சாதனங்கள் |
| G-8 | அச்சிடும் பொருட்கள் |
| G-9 | கணனிகளும் உதிரிப்பாகங்களும் |
| G-10 | சமூக நலன் பொருட்கள் |
| G-11 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் , மோட்டார் வாகனங்களுக்கான பற்றிகள் |
| G-12 | பொது உபகரணங்களும் வீட்டுப் பாவனைப் பொருட்களும் |
| G-13 | கல்விசார் உபகரணங்கள் |
| G-14 | விளையாட்டு உபகரணங்கள் |
| G-15 | இசைக் கருவிகள் |
| G-16 | வைத்தியசாலைக்கான மருந்து வகைகள் |
| G-17 | ஆயுர்வேத / சுதேச மருந்துகள் |
| G-18 | சுத்திகரிப்பு பொருட்களும் உபகரணங்களும் |
| G-19 | ஆயர்வேத மருந்துச் சரக்குகளும் பலசரக்குப் பொருட்களும் |
| G-20 | வைத்தியசாலைகளுக்கு உணவு வழங்கல் (உலர் உணவு மட்டும்) |
| G-21 | வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவும் குளிர்பானமும் , சிற்றுண்டி, பேக்கரி உணவு பொருட்கள் |
| G-22 | விவசாய எந்திரங்கள், எந்திர உபகரணங்களும் அவை தொடர்பான கருவிகளும் |
| G-23 | விவசாய பொருட்கள், உர வகைகள் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்கள் |
| G-24 | விவசாய விதைகள், நடுகைப் பொருட்கள் |
| G-25 | கால்நடைகளின் உணவுகள் மற்றும் ஏனைய பொருட்கள் |
| G-26 | கால்நடைகளுக்கான மருந்துகள் |
| G-27 | மீன்பிடி தொடர்பான பொருட்கள் |
| G-28 | கைத்தொழில் மூலப்பொருட்கள் |
| G-29 | இரசாயனப் பொருட்கள் , ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள் |
| G-30 | வாகனங்களிற்கான ரயர் மற்றும் ரியூப் |
| G-31 | வைத்தியசாலைக்கான துணிகள் வழங்கல் |
| G-32 | பாதணிகள் |
| G-33 | தொலைத்தொடர்பு சாதனங்கள் |
| G-34 | இரும்பு பொருட்சாதனங்கள் |
| G-35 | வைத்தியசாலை வாயு வழங்கல் **(Medical gas)** |
| G-36 | வைத்தியசாலை ஆய்வுகூட இரசாயனங்களும் மீள் நிரப்பல்களும் **(Regrets)** |
| G-37 | வைத்தியசாலை தளபாடங்கள் |
| G-38 | வைத்தியசாலைகளுக்கான ஆடைப்பொருட்களும் மற்றும் சுகாதார தொற்று நீக்கிய துண்டுகளும் |
| G-39 | பல் வைத்திய உபகரணங்கள் |
| G-40 | மருத்துவ உபகரணங்கள் |
| G-41 | ஓலி ஒளி உபகரணங்கள் |
| G-42 | மகாநாடு மற்றும் கூட்டங்களுக்கான உணவு வழங்கல் |

| தொகுதி இல: "S" | |
|---|---|
| உப தொகுதி இல | சேவைகள் - விபரம் |
| S-1 | கடிதத்தலைப்பு புத்தகங்கள், வெளியீடுகள் அச்சிடுதல், சுவரொட்டிகள், பதாதைகள் அச்சிடுதல், பெயர் பலகை, குறியீட்டு பலகை எழுத்து பொறித்தல், புத்தகம் கட்டுதல், அச்சு அடிச் சட்டம் (Block) தயாரித்தல், இறப்பர் முத்திரை திகதி முத்திரை தயாரித்தல். |
| S -2 | அலுவலக தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| S -3 | அலுவலக போட்டோ பிரதி இயந்திரங்கள், ரைப்ரைட்டர்கள், ரோனியோ மெசின்கள் மற்றும் மின் உபகரணங்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-4 | கணனிகள், பிறின்டர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-5 | குளிருட்டிகள், மின் உபகரணங்கள் மற்றும் மின்வயர்கள் பழுது பார்த்தலும் சேவிஸ் செய்தலும் |
| S-6 | பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் |
| S-7 | சுத்திகரிப்பு சேவைகள் வழங்கல், கட்டட தளங்கள், கதவுகள், ஜன்னல்கள், திரைச்சீலைகள் சுத்திகரிப்புச் செய்தல் |
| S-8 a or b | அ) வாகனம் பழுது பார்த்தல்:- உள்வாரியான திருத்தங்கள்<br>இயந்திரம் மற்றும் வாகனப்பகுதிகளை பழுது பார்த்தல் மற்றும் ஏனைய திருத்தங்கள்<br>ஆ) வாகனம் பழுது பார்த்தல்:- வெளிவாரியான திருத்தங்கள்<br>தகடுகள் (Tinkering) பழுது பார்த்தலும் பெயினட் அடித்தலும், |
| S-9 | வாகனம் பராமரித்தல்: கால அட்டவணைப் பிரகாரம் சேவிஸ் செய்தல், சில்லு ஒழுங்கு (alignment) பரிசீலித்தல், சில்லு சமன் செய்தல், டயர் மாற்றம் செய்தல் மற்றும் வாகன உட்புற சேவிஸ் செய்தலும் மினுக்கம் செய்தலும். |
| S-10 | விவசாய உபகரணங்கள் தயாரித்தல் / வடிவமைத்தல் மற்றும் விவசாய இயந்திரங்கள் உபகரணங்கள் திருத்தம் |
| S-11 | வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வாகனங்களை வழங்கல் (Passenger Vehicle) |
| S-12 | வாகனங்களுக்கு டயர் மாற்றம் செய்தல் , காற்று நிரப்புதல் , டயர் ரியூப் ஒட்டுதல், |
| S-13 | மர வேலைகள் திருத்தம் (சிறு திருத்தங்கள் ) |
| S-14 | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் |
| S-15 | ஒளி மற்றும் ஒலிப்பதிவு (Video and Audio Recording) |
| S-16 | புகைப்படப்பிடிப்பு |
| S-17 | தொலைபேசி உபகரண பழுதுபார்த்தல் |
| S-18 | நிலமட்டப்படுத்தல் சேவைகள் |
| S-19 | குசன் வேலைகள், தளவிரிப்புக்கள் மற்றும் தொடர்புடைய உள்ளக வேலைகள் வாகனங்களுக்கும் தளபாடங்களுக்கும் (upholstery works of furniture and vehicles) |
| S-20 | கனரக வாகனங்கள் வாடகைக்கு வழங்கல் |
| S-21 | குழாய் பொருத்துனர் சேவையும் நீர் வழங்கல் சேவையும் |
| S-22 | கணணி மென்பொருள் வழங்கல் |
| S-23 | நாய்களுக்கான கருத்தடை சேவை (Dog sterilization) |
| S-24 | மருத்துவ உபகரணங்கள் பராமரிப்பும் பழுதுபார்த்தலும் |

### நியந்தனைகள்

1. வழங்குநர்களாக பதிவு செய்தல் 2021 ஆம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியானதாகும்
2. உள்ளூர் பெறுகைகள் பதிவு செய்த வழங்குநர்கள் பட்டியலிலிருந்தும், விலை குறிப்பிட முறையின் கீழ் பெற்றுக்கொள்ளப்படும் பொருட்கள் சேவைகளுக்காக இலங்கை ரெலிகொ நிறுவனத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் வானவில் பக்கங்களில் **(Rainbow Pages** பெயர் குறிப்பிடப்பட்ட வழங்குநர்களிடமிருந்தும் பொதுவாக விலை மனுக்கள் கோரப்படும் எனினும் பொருள் கொள்பவருக்கு வேறு மூலங்களிலிருந்தும் விலை மனு கோருவதற்கா உரிமையும் உண்டு.
3. விண்ணப்பங்களை பதிவு செய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையான விபரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. பதிவுக்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காம ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை பிரதம செயலாளர் கொண்டுள்ளா
5. மனுக்கள் கோரும்போது சரியான விலை மனுக்கள் சமர்ப்பிக்காத அல்லது கோரப்பட் பொருட்களை உரிய காலத்தினுள்ளும் மாதிரிக்கு அமைவாகவும் வழங்காத பதிவு செய் வழங்குநர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பதிவிலிருந்து நீக்கப்படும்
6. வியாபார பதிவுச்சான்றிதழில் குறிப்பிடப்பட்ட பொருட்கள், சேவைகளுக்கு மட்டுமே வழா குநர்கள் பதிவு செய்யப்படுவார்கள்.
7. வழங்குநர் குறிப்பிட்ட பொருட்கள், சேவைகளுக்கு வழங்குநர்களாக பதிவு செய்வதற் தாங்கள் தகுதியற்றவர் என காணப்படுமிடத்து தங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படு துடன் வைப்புப் பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.
8. பொருட்கள் சேவைகள் விநியோகிப்பதற்கு விருப்பு தெரிவிக்கும் மாவட்டம் / மாவட்ட கள் வழங்குநர்களால் குறிப்பிடப்படல் வேண்டும்.
9. பழுது பார்த்தலுக்கோ, வாகன பராமரிப்புக்கோ பதிவு செய்யப்படவுள்ள கராஜ்கள், சேவி நிலையங்கள் என்பன அடிப்படைத் தேவையான வசதிகளைக் கொண்டிருத்தல் அவசிய (விண்ணப்பத்துடன் அவர்கள் கொண்டுள்ள உபகரணங்களின் விபரங்களும் பயிற்சி பெற்ற வேலையாட்களின் விபரங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்). தேவையேற்படும் போது இயந்திரப் பொறியியலாளர் மூலம் தரத்தினை பரிசீலனை செய்வதற்கான மு அதிகாரம் உண்டு.
10. வடமாகாணத்தில் குறைந்தது ஓர் இடத்திலேனும் தங்கள் நிறுவனத்தின் ஒரு கிளை **(Branch)** /ஒரு காட்சி அறை/முகவர் / அங்கீகரிக்கப்பட்ட முகவர் **(Authorized Dealer)** ஆகியவற்றில் ஏதாவது ஒன்றையேனும் வைத்திருத்தல் வேண்டும்.
11. வழங்குநர்களுக்கு பெறுகைகளுக்கான காசு முற்பணம் வழங்கப்படமாட்டாது.
12. பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் தரப்பட்ட மாதிரியில் தயாரிக்கப்பட்டு உறுதிப்

படுத்தப்பட்ட வியாபாரப்பதிவுச் சான்றிதழின் பிரதியுடனும் (பிரதேச செயலகம்) வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியுடனும் (மாநகர சபை/நகர சபை/பிரதேச சபை) வரிப் பதிவுச் சான்றிதழின்பிரதியுடனும் மீளளிக்கப்படாத வைப்புப் பணத்துடனும் 2020 டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக "பிரதிப்பிரதம செயலாளர் (நிதி), மாகாணத் திறைசேரி, மாகாண சபை வளாகம், **A9** வீதி, கைதடி , யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அலுவலக வேலை நாட்களில் மு.ப 9.00 மணி முதல் மாலை 2.30 மணி வரை நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும் போது தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "2021ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்" என குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

13. முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பதிவு செய்யப்படவேண்டிய ஒவ்வொரு உப பொருட் தொகுதிக்கும், சேவைக்கும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா.500.00 க்கான காசுக்கட்டளை "பிரதிப்பிரதம செயலாளர்- நிதி, வட மாகாணம்." என்ற பெயரில் யாழ்ப்பாணம் தபாற் கந்தோரில் மாற்றக்கூடியவாறு பெறப்பட்டு இணைத்து அனுப்புதல் வேண்டும். அல்லது மாகாண சபை வளாகம், **A9** வீதி, கைதடி , யாழ்ப்பாணம். எனும் முகவரியில் இயங்குகின்ற மாகாணத்திறைசேரி அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 2.30 மணிவரை நேரடியாகப் பணத்தினைச் செலுத்திப் பெறுகின்ற பற்றுச் சீட்டினை இணைத்து அனுப்புதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட உப பொருட்கள் அல்லது உப சேவைகளின் தொகுதிக்கு பதிவு கோருவதாயின், ஒவ்வொரு உப பொருட் தொகுதிக்கும் அல்லது சேவைகளுக்கும் தனித்தனி விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத வைப்பு பணம் ரூபா 500.00 உம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

14. 2020 டிசெம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

15. விண்ணப்பப்படிவங்களை வடமாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத் தளமான **www.np.gov.lk** இல் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

16. மேலதிக விளக்கங்களுக்கு கணக்காளர், மாகாணத்திறைசேரி, வட மாகாணம் அவர்களுடன் தொலைபேசி இல 0212213540 மூலம் தொடர்பு கொள்ளமுடியும்.

| Official Use Only | |
|---|---|

# மாதிரி விண்ணப்பப்படிவம்

## 2021 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

## வட மாகாண சபை

1. வியாபார நிறுவனத்தின் பெயர் :- ..........................................
2. வியாபார நிறுவனத்தின் முகவரி :-..........................................
3. வியாபார நிறுவனத்தின் வடமாகாணத்திற்கு உட்பட்ட முகவரி :-...............
3.1 வியாபார நிறுவனத்தின் கிளை/ காட்சி அறை/முகவர்/அங்கீகரிக்கப்பட்ட முகவர் **(Authorized Dealer)** முகவரி.-..........................................
4. தொலைபேசி இலக்கம்
   நிலையானது **(Land)** :-..........................................
   கைத்தொலைபேசி **(Mobile)** :-..........................................
5. தொலைநகல் **(Fax)** இலக்கம்:- ..........................................
6. மின்னஞ்சல் முகவரி :-..........................................
7. வியாபார பதிவு இலக்கம் :-..........................................
(வியாபாரப்பதிவுச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)
8. வியாபாரத்தின் தன்மை :- ..........................................
9. வியாபார அனுமதிப்பத்திரத்தினை வழங்கிய நிறுவனத்தின் பெயர் (மாநகர சபை/ நகர சபை/பிரதேச சபை) (வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்):- ..........................................
10. வற் **(VAT)** வரி பதிவு இலக்கம் (இருப்பின்) (வற் **(VAT)** வரி பதிவு பத்திரத்தின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்):-..........................................
11. பதிவு செய்யப்படவேண்டிய பொருட்கள் / சேவைகளின் தொகுதி :-

| தொகுதி இல | பொருட்கள் /சேவைகள் விபரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

12. கணக்கினை பேணும் வங்கிகளின் பெயர்கள்:-..........................................
13. கடன் வசதி வழங்கப்படவுள்ள காலப்பகுதி **(Credit Period)**:-..........................................
14. வழங்கல் செய்யக்கூடிய மாவட்டங்களின் பெயர்கள் :-

(விண்ணப்பதாரி வழங்கல் செய்யக்கூடிய மாவட்டம்/ மாவட்டங்களினை "✓" அடையாளத்தினை இடுவதன் மூலம் தெரிவு செய்தல் வேண்டும்)

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | |
| வவுனியா | |
| மன்னார் | |
| கிளிநொச்சி | |
| முல்லைத்தீவு | |

என்னால்/எங்களால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை எனவும் வட மாகாணசபை பிரதம செயலாளரினால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள்/சேவைகளை வழங்குவதற்கும் உறுதியளிக்கிறேன். பதிவுக் கட்டணம் ரூபா.500.00 ற்கு ..........ஆம் திகதிய ............இலக்க காசுக் கட்டளை/ பற்றுச்சீட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

.............................. .................... ....................
விண்ணப்பதாரியின் ஒப்பம் பெயர் திகதி

**அ.பத்திநாதன், பிரதம செயலாளர்,**
**வட மாகாண சபை, மாகாணசபை வளாகம்,**
**A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.**

# தூர பிரதேசங்களுக்கான பேருந்து சேவைகள் ஆரம்பம்

(கொழும்பு)

தூர பிரதேசங்களுக்கான பேருந்து சேவைகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் குறித்த பேருந்துகள் நிறுத்தப்பட மாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# அரச நிறுவனங்களில் மட்டுப்படுத்தப்பட்டளவில் சேவைகள்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் ஊரடங்கு உத்தரவு இன்றைய தினம் தளர்த்தப்பட்டாலும் அரச நிறுவனங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாத்திரமே சேவையாட்களை இணைத்துக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பொது நிர்வாக அமைச்சு நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

மேல் மாகாணம் உட்பட பல பகுதிகளில் தற்போது அமுலில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் இன்று திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு நீக்கப்படவுள்ளது.

எனினும் சில மாவட்டங்களின் பொலிஸ் பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்பதுடன், அவை தனிமைப் படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (ஜ-4)

# அத்துமீறி நுழைந்தவர் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

முகக்கவசம் அணியாமல் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்குள் நுழைந்தமையினால் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட வர்த்தகரை 14 நாட்கள் தனிமைப்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அவர் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு அருகில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரியின் ஆலோசனைகளை மீறி முகக்கவசம் அணியாமல் பொருளாதார மத்திய நிலையத்திற்குள் நுழைய முயற்சித்துள்ளார்.

இதனால் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டிற்கமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார். பின்னர் இந்த வர்த்தகர் தம்புள்ளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது சந்தேக நபரை இரண்டு வாரங்கள் தனிமைப்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ஜ-4)

# இந்த ஆண்டில் டெங்கு நோயினால் 28 ஆயிரத்து 654 பேர் பாதிப்பு

(கொழும்பு)


நாட்டில் கடந்த ஒக்டோபர் மாதத்தில் மாத்திரம் 756 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் 11 ஆயிரத்து 573 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இதன் அடிப்படையில் கடந்த மாதம் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை பாரியளவில் குறைவடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் கடந்த பத்து மாதங்களில் நாட்டில் 28 ஆயிரத்து 654 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்த நிலையில், கடந்த ஆண்டு முழுவதுமான காலப்பகுதியில் ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 49 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்ததாகவும், தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் 11 ஆயிரத்து 608 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# உயிர் குடிக்கும் ஆழ்துளைக் கிணறுகள்

# நான்கு நாட்கள் மீட்புப் போராட்டம்

# மூன்று வயதுச் சிறுவன் சடலமாக மீட்பு



(போபால்)

எத்தனை முறை தான் கேட்பது ஆழ்துளை கிணற்றில் விழுந்த குழந்தைகளின் அழுகுரலை. இன்னும் எத்தனை உயிர்களைத்தான் கண்முன்னே இழப்பது மூடப்படாத ஆழ்துளை கிணறுகளால்.நிச்சயம் இதற்கு விடை காண வேண்டும்.

மத்திய பிரதேசத்தில் 200 அடி ஆழ ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்த 3 வயது சிறுவன் 4 நாட்களுக்கு பிறகு நேற்று அதிகாலை சடலமாக மீட்கப்பட்டான்.

மத்திய பிரதேச மாநிலம் நிவாரி மாவட்டம் பிருத்விப்பூர் பகுதியில் உள்ளது சேதுபுராபரா. இந்த கிராமத்தைச் சேர்ந்தவர் ஹரிகிருஷ்ணன். இவரது 3 வயது மகன் பிரகால்த் விளையாடிக் கொண்டிருந்த போது கடந்த 4 ஆம் திகதி அருகில் இருந்த மூடப்படாத 200 அடி ஆழ்துளை கிணற்றில் தவறி விழுந்தான்.


சிறுவனின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து ஆழ்துளை கிணற்றை பார்த்துள்ளனர். அதில் சிறுவன் இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்த அவர்கள் உடனடியாக பொலிஸாருக்கும் தீயணைப்பு படைக்கும் தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்த இராணுவம் குழந்தையை மீட்கும் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

கடந்த 3 நாட்களாக இரவு பக்லாக இராணுவ வீரர்கள், மாநில மீட்புக் குழுவினர் போராடினர். நேற்று அதிகாலை 3 மணிக்கு சிறுவனை வெளியே எடுத்து மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், சிறுவன் உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

200 அடி ஆழ ஆழ்துளை கிணற்றில் விழுந்து 3 வயது சிறுவன் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஜ-4)

# யாரையும் கைவிடாத அமெரிக்காவை நாம் உருவாக்கப் போகின்றோம்

## ஜோ பிடன் வெற்றி உரை



(வோஷிங்டன்)

யாரையும் கைவிடாத அமெரிக்காவை நாம் உருவாக்கப் போகிறோம் என புதிதாக தெரிவாகியுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்துள்ளார்.

தனது ஆதரவாளர்கள் மத்தியில் வெற்றி உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் நீடித்த இழுபறி முடிவுக்கு வந்தது. 290 தேர்தல் சபை வாக்குகள் பெற்று ஜோ பிடன் வெற்றி பெற்றார். கமலா ஹாரிஸ் துணை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒட்டுமொத்த அமெரிக்காவும் அநீதிக்கு எதிராக நின்றுள்ளது. அமெரிக்காவை மீட்டெடுப்பதற்கான நேரம் இது.

என்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைக் காப்பாற்றுவேன். நாட்டு மக்கள் வெற்றி மூலம் தங்கள் குரலை வெளிப்படுத்தியிருக்கின்றனர். இதை விட சிறந்த நாள் வருமென்று நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள். உலக அரங்கில் அமெரிக்காவின் மரியாதையை உயர்த்த உழைப்போம்.

கடந்த 4 ஆண்டுகளாக சமத்துவம், சம உரிமைக்காக நாம் போராடி வந்தோம். கொரோனா காலத்திலும் கட்சிக்காகவும் வெற்றிக்காகவும் உழைத்தவர்களுக்கு நன்றி.

ஆட்சி ஏற்றவுடன் நமது திட்டங்கள் அனைத்தும் அறிவியல்பூர்வமாக இருக்கும். கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கே முன்னுரிமை.

அமெரிக்காவில் ஒவ்வொருவரின் பாதுகாப்பே எனது இலக்கு. எந்த பேதமும் இல்லாமல் அனைத்து தரப்பு மக்களும் நம்மை ஆதரித்து இருக்கிறார்கள்.

வாய்ப்புகள் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படும். பாராளுமன்றத்தில் அனைவரும் ஒன்றிணைந்து ஆக்கப்பூர்வமாகச் செயற்பட வேண்டும்.

நம்மால் முடியும் என்ற முழக்கத்துடன் ஒபாமா ஆட்சிக்கு வந்தார். அவருடன் நான் இருந்தேன். யாரையும் கைவிடாத அமெரிக்காவை நாம் உருவாக்கப் போகின்றோம். அனைத்து அமெரிக்கர்களுக்குமான ஜனாதிபதியாக இருப்பேன் என தெரிவித்துள்ளார். (ஜ-4)

# கச்சா எண்ணெய் விலையில் வீழ்ச்சி

(ஜெனீவா)

உலக சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக இந்தச் சரிவு ஏற்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, ப்ரெண்ட் வகை கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை குறைந்த எல்லையாக 40 டொலர்களாக காணப்பட்டிருந்தது.

எனினும் அது 39 டொலர்கள் 45 சதத்தில் இறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை உலகளாவிய ரீதியில் கட்டுப்பாடுகள் இன்னும் தொடர்வதாலும் எண்ணெய் நுகர்வு குறைவும் இந்த விலை வீழ்ச்சிக்குக் காரணம் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்; பீதியடைந்த மக்கள் வீதிகளில் தஞ்சம்

(டோக்கியோ)

ஜப்பானில் தென்கிழக்குப் பகுதியிலுள்ள சிச்சிஜிமா தீவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6.2 புள்ளிகளாக பதிவானது. இதனால் பீதி அடைந்த மக்கள் அலறியடித்தபடி வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் புகுந்தனர்.

நெருப்பு வளையம் என்று அழைக்கப்படும் புவித்தட்டுகள் அடிக்கடி நகரும் இடத்தில் ஜப்பான் அமைந்துள்ளதால் அங்கு நிலநடுக்கம் ஏற்படுவது வாடிக்கையான ஒன்றாக உள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஜப்பானில் தென்கிழக்குப் பகுதியிலுள்ள சிச்சிஜிமா தீவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6.2 புள்ளிகளாக பதிவானது. இந்த நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக ஜப்பான் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. சில விநாடிகள் நீடித்த நிலநடுக்கத்தின் போது வீடுகள், கடைகள் உள்ளிட்ட கட்டடங்கள் பயங்கரமாக குலுங்கின.

இதனால் பீதி அடைந்த மக்கள் அலறியடித்தபடி வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் புகுந்தனர். சக்திவாய்ந்த நிலநடுக்கம் என்றபோதிலும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ஜ-4)

# கொரோனாவை விரைவாக கண்டறியும் ஆன்டிஜென் பரிசோதனைகள் அறிமுகம்

## பி.சி.ஆர்.பரிசோதனையும் தொடரும்–சுகாதார அமைச்சு



**(கொழும்பு)**
**நாட்டில் கொரோனா தொற்றினை கண்டறிவதற்கான புதிய விரைவான ஆன்டிஜென் பரிசோதனை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் தற்போது நடத்தப்படும் பி.சி.ஆர். சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.**

புதிய விரைவான ஆன்டிஜென் சோதனை அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், தற்போது நாட்டில் நடத்தப்படும் பி.சி.ஆர்.சோதனைகளின் எண்ணிக்கையில் எந்தக் குறைப்பும் இருக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் பி.சி.ஆர். சோதனை தொடர்பாக நிலவிய பிரச்சினைகள் இப்போது சரிசெய்யப்பட்டு, தற்போது அதிகபட்ச அளவில் நாளொன்றுக்கு பி.சி.ஆர்.சோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அண்மைய நாட்களில் முல்லேரியா வைத்தியசாலையில் பி.சி.ஆர் இயந்திரம் சரியாக செயற்படாததால் பரிசோதனை முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையில், பி.சி.ஆர்.சோதனைக்கு மாற்றாக இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ள ஆன்டிஜென் அடிப்படையிலான விரைவான நோயறிதல் பரிசோதனையின் தரத்தை மருத்துவ நிபுணர்கள் குழு தற்போது ஆய்வு செய்து வருகிறது.

வைரஸ் உள்ள எந்தத் தரப்பினரை அன்டிஜென் சோதனைகளுக்கு உட்படுத்த வேண்டும் என்பதை அறிய நிபுணர் குழு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த புதிய சோதனை முறையை அறிமுகப்படுத்தியதன் மூலம், பி.சி.ஆர்.சோதனையை விட குறுகிய காலத்திற்குள் முடிவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# நீர்க் கட்டணங்களுக்கு சலுகை



(கொழும்பு)
தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள அல்லது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ளவர்களுக்கு நீர் கட்டணங்களை செலுத்துவதற்காக சலுகை காலம் வழங்கப்படும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

நீர்க் கட்டணங்களை செலுத்த முடியாத தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள அல்லது தனிமைப் படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள நீர் பாவனையாளர்கள் கட்டணத்தை செலுத்த முடிந்த தினத்தில் செலுத்துவதற்காக சலுகை வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# 71 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)
மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து 71 பேர் நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பினர்.

ஓமான்,டுபாய்,கட்டார் ஆகிய நாடுகளில் தங்கியிருந்த இலங்கையர்களே, அந் நாடுகளின் விமானங்கள் மூலம் நாட்டை வந்தடைந்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஐ-4)

# கொழும்பில் சீனா முதலீடு

(கொழும்பு)
கொழும்புத் துறைமுக நகரில் மேலும் ஒரு பில்லியன் முதலீட்டை சீனா மேற்கொள்ளவுள்ளது.

ஹொங்கொங்கை தளமாக கொண்டு இயங்கும் ஐ.எப்.சி. எனப்படும் சர்வதேச நிதிமையம் (international financial centre) இந்த நிதி முதலீட்டைச் செய்யவுள்ளது.

தற்போது சர்வதேச நிதி மையத்தின் முதலீடுகளை சுதந்திரமாக மேற்கொள்வதற்காக காணப்படுகின்ற சட்ட வாக்க வரைவுகள் இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனை அடுத்து இம் மாத இறுதிக்குள் அதற்கான பாராளுமன்ற அங்கீகாரம் பெறப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறு பாராளுமன்றம் அங்கீகாரம் பெறப்பட்டவுடன் சர்வதேச நிதி மையம் தனது முதலீடுகளை அடுத்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து முன்னெடுக்கவுள்ளது.

இந்த முதலீடுகள் துறைமுக நகரத்தின் ஒட்டுமொத்த திட்டங்களினதும் முன்னோடித் திட்டத்திற்கானதாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு துறைமுக நகரத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஆறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதோடு இதன் புதிய முகாமைத் திட்டப் பணிப்பாளராக ராஜா எதிரிசூரிய கடந்த முதலாம் திகதி நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## கழுதையும் கற்றுக் கொடுக்கும்!

ஒரு சராசரி மனிதனுடைய இயல்பு என்ன? இன்பம் வந்தால் துள்ளிக் குதிப்பான் துன்பம் வந்தால் சோர்ந்து போய் ஒரு மூலையில் உட்கார்ந்து விடுவான். இவன் தான் சராசரி மனிதன்.

ஆனால் ஒருத்தன் இன்பம் வந்தால் அதற்காக மகிழ்ச்சிய டைவதில்லை.. துன்பம் வந்தால் அதற்காக சோர்ந்து போவதில்லை..என்று வைத்துக் கொள்ளுங்கள்..அப்படி இருந்தால் அவன் சாதாரண ஆள் இல்லை.ஒரு ஊரிலே ஒரு ஞானி இருந்தார். அவரைத் தேடிக் கொண்டு ஒரு பெரியவர் வந்தார். ஐயா...ஞானத்திலே சிறந்த ஞானம் எது? என்று கேட்டார்.

இதற்கு அந்த ஞானி என்ன பதில் சொன்னார் தெரியுமா? இன்பத்தினால் மகிழ்ச்சியடையாமலும் துன்பத்தினால் சோர்வடையாமலும் இருப்பது தான் அது என்றாராம்.சரி சுவாமி அப்படிப்பட்ட ஞானம் உங்களுக்கு எப்படி வந்தது? என்று கேட்டிருக்கின்றார் இவர்.அதை ஒரு கழுதையிடமிருந்து நான் கற்றுக் கொண்டேன் என்றாராம் அவர்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை... ஒரு மாதிரியா முழித்துக் கொண்டிருக்கின்றார்.இதை அவர் புரிந்து கொண்டார்.நீங்கள் நாளைக்குக் காலையில் நம்முடைய ஆசிரமத்திற்கு வாங்க... புரிய வைக்கின்றேன்..என்றார்.சரி என்று இவர் போய்விட்டார். மறுநாள் காலையில் ஆசிரமத்திற்கு வந்து சேர்ந்தார். ஞானி அவரைக் கூப்பிட்டு உட்கார வைத்தார்.வாங்க..வந்து இப்படி உட்காருங்க... கொஞ்ச நேரத்திலே இந்த வழியாக ஒரு கழுதை போகும்.அதைக் கவனியுங்கள் என்றார்.

இவருக்கு இன்னமும் ஒன்றும் புரியவில்லை..ஒரே குழப்பமாக இருந்தது... இருந்தாலும் அந்த ஞானி சொன்னது மாதிரியே உட்கார்ந்திருந்தார்.

கொஞ்ச நேரத்திலே அந்த வழியாக ஒரு கழுதை போச்சு. அது முதுகு நிறைய அழுக்கு மூட்டைகள்...அதை சுமந்து கொண்டு போகின்றது...ஒரு சலவைத் தொழிலாளி அதை ஓட்டிக் கொண்டு போகின்றார்.கொஞ்ச தூரத்திலே ஒரு ஆறு இருக்கு...அங்கே போய் துணியெல்லாம் சுத்தப்படுத்திக் கொண்டு மாலை நேரம் திரும்பி இந்த வழியாலே வருவார்கள்.ஞானி சொன்னது மாதிரியே இந்தப் பெரியவர் அழுக்கு மூட்டையை சுமந்துகொண்டு போகின்ற அந்தக் கழுதையை கவனித்தார்.கழுதை போய்விட்டது.அதன்பின்பு ஞானியைத் திரும்பிப் பார்த்தார்.இப்பொழுது அந்த ஞானி சொன்னார் மாலை வரை க்கும் நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும் என்றார். அதே மாதிரி இவரும் இருந்தார். மாலைநேரம் அந்த ஞானி சொன்னார்.

ஐயா..இப்பொழுது கொஞ்ச நேரத்திலே அந்தக் கழுதை இந்த வழியாக திரும்பி வரும்.அதையும் கவனியுங்கள்என்றார்.இவரும் கவனித்தார்.கழுதை வந்தது. அதன் முதுகில் சலவை செய்யப்பட்ட துணி மூட்டை. அது பாட்டுக்குச் சுமந்து கொண்டு போகின்றது. பெரியவருக்கு ஒன்றும் புரியவில்லை. பொறுமை இழந்துவிட்டார்.சரி சுவாமி... இந்தக் கழுதைக்கும் உங்கள் ஞானத்திற்கும் என்ன சம்பந்தம்? என்றார்.இப்பொழுது அந்த ஞானி விளக்கினார்.ஐயா இந்தக் கழுதை இதே மாதிரி தினமும் காலையில் அழுக்கு மூட்டைகளைச் சுமந்து கொண்டு ஆற்றுக்குப் போகின்றது மாலையில் வெண்மையான சுத்தமான துணிகளைச் சுமந்து கொண்டு திரும்பி ஊருக்குப் போகின்றது.

காலையில் இது போகும் போது முதுகிலே அழுக்கு மூட்டைகளைச் சுமந்து கொண்டு போகின்றோமே..என்கின்ற வருத்தம் அதுக்கு இல்லை.

மாலை திரும்பி வரும்போது சுத்தமான துணிகளை சுமந்து கொண்டு வருகின்றோம்.. என்கின்ற மகிழ்ச்சியும் அதற்கு இல்லை. இதைப் பார்த்துத் தான் நானும் அது மாதிரி ஞானத்தைக் கற்றுக் கொண்டேன்..என்றார்.

அதனால் யார் கற்றுக் கொடுக்கின்றார்கள் என்பதைவிட எதைக் கற்றுக் கொள்கின்றோம்.என்பது தான் முக்கியம்.

ஒரு சினிமா பார்க்கின்றோம்.ஒரு அருவி கொட்டுவது மாதிரி காட்சி வருகின்றது... தண்ணீர் வழிகின்றது படம் முடிந்ததும் பார்த்தீர்கள் என்றால் அந்த திரை நனைந்து போயா இருக்கும்?

ஒரு தீப்பிடித்து எரிகின்ற காட்சியை பார்க்கின்றீர்கள்..காட்சி முடிந்ததும்...அந்த வெண் திரை கருகிப் போயா இருக்கும்?

படத்திலே வருகின்ற தண்ணீரும் நெருப்பும்...அந்தத் திரையை பாதிப்பது இல்லை. நாம் அந்த திரை மாதிரி இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அந்தப் பக்குவம் வந்துவிட்டால் இன்பமும் துன்பமும் நம்மை எதுவும் செய்யாது.

ஒரு சினிமாவை பார்க்கின்றவரைக்கும் சிரிக்கலாம். அழலாம்.. பார்த்துவிட்டு வெளியிலே வரும்போது அழுது கொண்டே வரக்கூடாது. ஒருத்தர் வந்தார் அப்படி. படம் முடிந்து வெளியே வரும் பொழுது அருவி மாதிரி கண்ணீர் சிந்திக் கொண்டே வந்தார். ஏன் சேர் படம் அவ்வளவு சோகமா? என்று கேட்டார் இன்னொருவர்.இல்லை சேர் கூட்டம் மிகவும் குறைவு சேர்.மொத்தம் படம் பார்க்க வந்தவர்களே 15 பேர் தான் சேர்.. என்றார் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே.. அதற்கு நீங்கள் ஏன் சேர் அழுகின்றீர்கள்? என்றார் இவர். இந்தப் படத்தினுடைய தயாரிப்பாளர் நான்தான் சேர் என்றார் அவர்.

# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

**13**

**கலாநிதி க.தவலிங்கம்**
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இத் தேர்தல் முறைமையின் மூலம் மக்களின் வாக்குகளின் **(Popular Votes)** அடிப்படையில் முதலிடம் பெறாதவர்கூட தேர்தல் கல்லூரி / தேர்வு செய்வோர் அவை/ தேர்தல் சபை வாக்குகளில் **(Electoral votes)** பெரும்பான்மையைப் பெற்று ஜனாதிபதியாக முடியும். 4 தடவைகள் இவ்வாறு வேட்பாளர்கள் வெற்றியீட்டியுள்ளனர். 1824 ஆம் ஆண்டு ஜனநாயக் குடியரசுக் கட்சியின் ஜோன் கியூ அடம்ஸ், 1876 ஆம் ஆண்டு குடியரசுக் கட்சியின் ரதர்போர்ட் பி ஹையஸ், 1888 ஆம் ஆண்டு குடியரசுக் கட்சியின் பெஞ்சமின் ஹரிசன் 2000 ஆம் ஆண்டு குடியரசுக் கட்சியின் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஆகியோர் மக்களின் நேரடி வாக்குகளை குறைவாக பெற்ற போதிலும் தேர்தல் கல்லூரி வாக்குகளில் முதலிடம் பெற்று ஜனாதிபதியாகினர்.

**இத்தேர்தல் முறைமையின் மூலம் மக்களின் வாக்குகளின் (Popular Votes) அடிப்படையில் முதலிடம் பெறாதவர்கூட தேர்தல் கல்லூரி / தேர்வு செய்வோர் அவை வாக்குகளில் (Electoral votes) பெரும்பான்மையைப் பெற்று ஜனாதிபதியாக முடியும். 4 தடவைகள் இவ்வாறு வேட்பாளர்கள் வெற்றியீட்டியுள்ளனர்.**

தேர்தல் கல்லூரி / தேர்வு செய்வோர் அவை வாக்குகளில் பெரும்பான்மை ஆதரவு எந்த வேட்பாளருக்கும் கிடைக்காமல் போனால், முதல் மூன்று வேட்பாளர்களில் இருந்து ஜனாதிபதியை பிரதிநிதிகள் சபை தேர்வு செய்யும். மீதி இரண்டு வேட்பாளர்களில் இருந்து துணை ஜனாதிபதியை செனட் சபை தேர்வு செய்யும். அது அபூர்வ மான சூழ்நிலை தான். ஆனால், முன்பு ஒரு முறை இப்படி நடந்துள்ளது. 1824 ஆம் ஆண்டில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜான் குவின்சி ஆடம்ஸ் அந்த முறையில் தான் வெள்ளை மாளிகையில் நுழைந்தார்.

**தேர்வு செய்வோர் அவை வாக்குகளில் பெரும்பான்மை ஆதரவு எந்த வேட்பாளருக்கும் கிடைக்காமல் போனால், ஜனாதிபதியை பிரதிநிதிகள் சபை தேர்வு செய்யும். துணை ஜனாதிபதியை செனட் சபை தேர்வு செய்யும். ஒரு முறை இப்படி 1824 ஆம் ஆண்டில் நடந்துள்ளது.**

### "வாட்டர் கேட்" ஊழல்

1968 முதல் 1974 வரை ஜனாதிபதியாக இருந்தவர் நிக்சன். குடியரசு கட்சியைச் சேர்ந்த அவர் தன்னுடைய 55ஆவது வயதில்1968இல்ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு 1972இல் நடந்த ஜனாதிபதி தேர்தலில் நிக்சன் மீண்டும் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அப்போது அவர் மீது ஊழல் புகார் ஒன்றை எதிர்க்கட்சியினர் கூறினர். ஜனநாயகக்கட்சி (எதிர்க்கட்சி) தலைமையகம் இயங்கும் "வாட்டர் கேட்" மாளிகையில் ரகசியமாக ஒலிப்பதிவு கருவிகளைப் பொருத்தி, அந்தக் கட்சியினரின் உரையாடல்களைப் பதிவு செய்து, அவர்களுடைய தேர்தல் வியூகம் பற்றி தெரிந்து கொண்டார் என்பதே நிக்சன் மீதான குற்றச்சாட்டு ஆகும். இந்த விவகாரம் 1974ஆம் ஆண்டு மத்தியில் விஸ்வரூபம் எடுத்தது. இந்தக் குற்றச்சாட்டை தொடக்கத்தில் நிக்சன் மறுத்து வந்தார்.

இதுபற்றி பூர்வாங்க விசாரணை நடத்திய பாராளுமன்ற குழு "நிக்சன் குற்றவாளி. அவரை பதவியில் இருந்து நீக்க, அமெரிக்க சட்டசபையில் தீர்மானம் கொண்டு வரலாம்" என்று சிபாரிசு செய்தது.

**1974ஆம் ஆண்டு மத்தியில் விஸ்வரூபம் எடுத்த "வாட்டர் கேட்" ஊழல் மிகவும் பிரசித்தமானதொன்றாகும். இப் பிரச்சினையால் ஜனாதிபதியாக இருந்த நிக்சன் பதவி துறக்க வேண்டி ஏற்பட்டது.**

அமெரிக்க அரசியல் சட்டப்படி, ஜனாதிபதியை பதவியில் இருந்து நீக்க வேண்டுமானால், அதற்கான தீர்மானம் பாராளுமன்றத்தில் (கீழ் சபையில்) பாதிக்கு மேற்பட்டவர்களின் ஆதரவுடன் நிறைவேற வேண்டும். அதன் பிறகு மேல் சபையில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற வேண்டும். அப்போதுதான் ஜனாதிபதியை பதவியில் இருந்து நீக்க முடியும்.

ஆனால் நிக்சனை பதவியில் இருந்து நீக்காமல், அவருடைய போக்கை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றினால் போதும் என்று ஒரு பகுதியினர் முயற்சி மேற்கொண்டனர். ஆனால், பாராளுமன்றத்தில் உள்ள நிக்சனின் ஆதரவாளர்கள் பலரும், அவர் பதவி விலகுவதுதான் நல்லது என்று கருத்து தெரிவித்தனர். அதன் மூலம்தான், நிர்வாகத்தில் ஏற்பட்ட குறையை போக்க முடியும் என்றும் கூறினார்கள். இந்த நிலையில் நிக்சன் திடீர் என்று ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில், "நான் குற்றவாளி" என்றும் ஒப்புக் கொண்டார்.

### நிக்சனின் அறிக்கை வருமாறு:-

"இந்த ஊழல் வழக்கில் நான் குற்றவாளி. நடைபெற்ற தவறுகளுக்கெல்லாம் நான்தான் பொறுப்பு. அதற்காக வருந்துகிறேன். எதிர்க்கட்சி தேர்தல் அலுவலகத்தில் ஒட்டு கேட்கும் வேலை என் அனுமதியுடன்தான் நடந்தது. இந்த ஊழல் பற்றி இரகசிய பொலிஸார் விசாரணை தொடங்கியபோது அதை தடுக்கவும் திட்டமிட்டோம். எல்லா உண்மைகளையும் என் சட்டத்தரணியிடமும், என் உதவியாளர்களிடமும் மறைத்து விட்டேன். இந்த குற்றத்திற்காக என்னை பதவி நீக்கம் செய்வது நியாயம் அல்ல." இவ்வாறு நிக்சன் கூறியிருந்தார். இந்த திடீர் அறிவிப்பு நிக்சனின் தீவிர ஆதரவாளருக்கு பெரும் அதிர்ச்சியூட்டியது.

"நான் குற்றவாளி" என்று நிக்சன் ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து அமைச்சர் சபையின் அவசர கூட்டத்தை அவர் கூட்டினார். அமைச்சர் சபை கூட்டத்தில் நிக்சன் பேசும்போது, "நான் பதவியில் இருந்து இராஜினாமா செய்யமாட்டேன். தொடர்ந்து ஜனாதிபதியாக இருப்பேன்" என்று அறிவித்தார்.

உண்மையை ஒப்புக்கொண்டால், தனக்கு மன்னிப்பு கிடைக்கும் என்று நிக்சன் நம்பினார். ஆனால் அது நேர்மாறான விளைவுகளை ஏற்படுத்தின. நிக்சனுக்கு ஆதரவாக இருந்த சிலரும், அவருக்கு எதிராக மாறினார்கள். நிலைமை விபரீதமாக போய்க்கொண்டிருந்ததால் நிக்சனின் குடியரசு கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் கூடி ஆலோசனை செய்தார்கள். நிக்சனின் முக்கிய ஆதரவாளர்கள் என்று கருதப்படும் அனைவரும் இதில் கலந்து கொண்டனர்.

பதவியில் இருந்து நிக்சன் விலக வேண்டும் என்று அவர்கள் அனைவருமே கருத்து தெரிவித்தார்கள். "பதவியை விட்டு நீங்களே (நிக்சன்) விலகி விடுங்கள் அல்லது நாங்கள் உங்களை பதவியில் இருந்து நீக்கவேண்டியது இருக்கும்" என்று அவர்கள்ஒரு தூதுக்குழுவை அனுப்பி நிக்சனிடம் தெரிவித்து விட்டார்கள்.

குற்றச்சாட்டு காரணமாக பதவி விலகும் ஜனாதிபதி மீது அவர் செய்த குற்றத்துக்காக நீதிமன்றில் வழக்கு தொடர முடியும். ஆனால், நிக்சன் அவராக இராஜினாமா செய்வதால் அவர் மீது வழக்கு தொடராமல் விட்டு விடலாம் என்று அமெரிக்க மேல்சபையில் தீர்மானம் தாக்கல் செய்யப்பட்டது.

09.08.1974 அன்று அதிகாலை 6.30 மணிக்கு நிக்சன் தொலைக்காட்சியில் தோன்றி தனது இராஜினாமா அறிவிப்பை வெளியிட்டார். இராஜினாமா கடிதத்தை வெளிநாட்டு இலாகா அமைச்சர் கிசிங்கரிடம் கொடுத்தார். பிறகு இராஜினாமா ஏற்கப்பட்டது. "ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்கிறேன்" என்ற ஒரு வரியை மட்டும் எழுதி கீழே கையெழுத்து போட்டிருந்தார்.

அமெரிக்க அரசியல் சட்டப்படி ஜனாதிபதி பதவியை விட்டு விலகினால், துணை ஜனாதிபதி, ஜனாதிபதியாக பதவி ஏற்க வேண்டும். அதன்படி அதுவரை துணை ஜனாதிபதியாக இருந்த ஜெரால்டு போர்டு ஜனாதிபதியாக பதவி ஏற்றார்.

### அமெரிக்க கொடி

அமெரிக்காவின் தேசியக் கொடி அமெரிக்க கொடி என அழைக்கப்படுகிறது. 1777 ஆம் ஆண்டு ஜூன் 14ஆம் திகதி அமெரிக்காவின் புதிய கொடி வடிவமைக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டது. அதில் 13 நட்சத்திரங்களும் 13 கோடுகளும் இருந்தன. அன்றிலிருந்து ஜூன் 14ஆம் திகதியை கொடி தினமாக அமெரிக்கர்கள் கொண்டாடுகின்றனர். தற்போதுள்ள அமெரிக்க கொடியில் 50 நட்சத்திரங்கள் மற்றும் 13 வெள்ளை சிவப்பு கோடுகளும் உள்ளன. 1960 ஆம் ஆண்டு அமெரிக்க கொடியின் 27 ஆவது வடிவமைப்பான இது ஏற்றுக்கொள்ளப்பட்டு 57 வருடங்களாக நடைமுறையில் உள்ளது.

50 நட்சத்திரங்கள் அமெரிக்காவின் ஐம்பது மாகாணங்களை குறிக்கும் விதமாக உள்ளன. அமெரிக்கா உருவாவதற்கு காரணமாக இருந்த - பிரிட்டிஷ் அரசிடம் இருந்து சுதந்திரம் பெற்ற 13 பிரிட்டிஷ் காலனிகளை 13 கோடுகள் குறிக்கிறது. பல்வேறு கால கட்டங்களில் மாகாணங்களின் எண்ணிக்கையை குறிக்கும் வகையில் அமெரிக்க கொடியில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அந்த வகையில் அமெரிக்காவில் 15 மாகாணங்கள் இருந்ததை குறிக்கும் வகையில் 1794 ஆம் ஆண்டு ஜனவரி 13ஆம் திகதி, அமெரிக்காவின் கொடியில் மாற்றங்கள் ஏற்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டது. அதில் 15 நட்சத்திரம் 15 கோடுகளும் இருந்தன. இது 13 கோடுகளுக்கு மேல் இருந்த ஒரே அமெரிக்க கொடியாகும். அக் கொடியில் உள்ள சிவப்பு: நெஞ்சுரம் மற்றும் வல்லவர்என்பதையும் வெள்ளை: தூய்மை மற்றும் அப்பாவித்தனம் என்பதையும்,நீலம்: விழிப்புணர்வு, விடாமுயற்சி மற்றும் நீதி என்பதையும் குறிக்கின்றன. **(தொடரும்...)**

# கொரோனாவுக்கு ஒரு மீற்றர் போதாது

(கொழும்பு)
கொரோனா வைரஸின் புதிய நடவடிக்கைகளின் அடிப்படையில் சமூக இடைவெளியை ஒரு மீற்றருக்கு மேல் கடைப்பிடிக்க வேண்டும் என சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார். ஒன்றரை அல்லது இரண்டு மீற்றர் சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.


இந்த நோயை கட்டுப்படுத்தும் பிரதானமான நடைமுறை மக்களின் நடவடிக்கைகளிலேயே இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# இதுவரை 235 பொலிஸாருக்கு கொரோனா

(கொழும்பு)
மேல் மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் மொத்தம் 235 பொலிஸ் அதிகாரிகள் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதுதவிர தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு குறைந்தது 300 பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அதே நேரத்தில் சுய தனிமைப்படுத்தலில் ஆயிரத்து 425 பொலிஸார் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## கொடி மர தத்துவம்

(தொடர்ச்சி)
லௌகீக வாழ்க்கையில் சிக்கித் தவிக்கும் நாம் எல்லோருமே பாசத்துக்கு கட்டுப்பட்டவர்கள். தர்ப்பைக் கயிறு எனும் பாசத்தால் கொடி துணி எனும் உயிர் கட்டப்பட்டுள்ளது. அந்த உயிர் இறைவன் திருவடியை அடைதல் என்ற தத்துவத்தை கொடி ஏற்றம் நமக்கு சுட்டிக் காட்டுகிறது.

நமது உயிர் இறைவன் திருவடியை தஞ்சமடைய வேண்டுமானால் நம் மனமும் ஒருமுகமாக நிலை நிறுத்தப்பட வேண்டும். இதை உணர்த்த கொடிமரம் நேராக நிமிர்ந்து நிற்பதாக சொல்கிறார்கள்.

இன்னொரு வகையில் சொல்வதென்றால் அசுர சக்திகளை அகற்ற சிவகணங்களை கோவிலுக்குள் அழைக்க ஆலயத்தையும் பக்தர்களையும் பாதுகாக்கவே கொடி ஏற்றம் நடத்தப்படுகிறது. அதனால் தான் கொடி மர உச்சியில் அந்தந்த ஆலய இறைவனின் வாகனம் ஒரு அடையாளச் சின்னமாக அமைக்கப்படுகிறது.

சிவன் கோவிலில் நந்தி, பெருமாள் கோவிலில் கருடன், அம்மன் கோவிலில் சிங்கம், விநாயகர் கோவிலில் எலி, முருகன் கோவிலில் மயில், சாஸ்தா கோவிலில் குதிரை உருவம் அமைக்கப்படும். இந்த உருவங்களைத்தான் அந்தந்த ஆலயங்களில் கொடிகளில் வரைந்து ஏற்றுவார்கள். கீழ் நிலையில் உள்ள ஆன்மாவை இறைவன் உயர்நிலைக்கு உயர்த்துகிறான் என்பதை இது காட்டுகிறது.

இப்படி பல்வேறு வகைகளில் சிறப்புடைய கொடி மரத்துக்கு மூல லிங்கத்துக்கு செய்யும் அபிஷேகம், ஆராதனை, நைவேத்தியம் முதலிய அனைத்தும் செய்ய வேண்டும் என்பது விதியாகும். அந்த அளவுக்கு கொடி மரம் மூலவருக்கு நிகரானது.

இன்னும் சொல்லப்போனால் கொடி மரம் அருகில் நின்று நாம் செய்யும் எல்லா பிரார்த்தனைகளும் மூலவரிடம் எதிரொலிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

கொடி மரத்தை தொட்டு வணங்கினால் மட்டும் போதாது. சுற்றி வந்தும் வணங்குதல் வேண்டும்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை "ஓரறிவை ஆறறிவு வணங்குகிறது" என்று பாடியுள்ளார். ஓரறிவுள்ள மரத்தை ஆறறிவுள்ள மனிதன் வழிபடுகிறான் என்பது இதன் பொருள். இந்த வணக்க முறைக்கும் விதிமுறை உள்ளது.

நாம் கால் நீட்டி விழுந்து வழிபடும் போது பின்புறம் எந்த தெய்வ சந்நிதியும் இருக்கக் கூடாது. ஆலயத்தின் உள்ளே பல சந்நிதிகள் இருக்கும் என்பதால்தான் விழுந்து வணங்கக் கூடாது. கொடி மரம் இருக்கும் பகுதியில் எந்த சந்நிதியும் இருக்காது என்பதால்தான் கொடி மரம் அருகே விழுந்து வணங்க வேண்டும் என்கிறார்கள்.

ஆண்கள் எப்போதும் 2 கால்கள், 2 கைகள், 2 காதுகள், நெற்றி, மார்பு ஆகிய 8 உறுப்புகளும் தரையில் படும் வகையில் அஷ்டாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும். பெண்கள் தலை, 2 முழங்கால், 2 உள்ளங்கைகள் ஆகிய 5 உறுப்புகள் தரையில் பட பஞ்சாங்க நமஸ்காரம் செய்ய வேண்டும்.

கொடி மரத்தை வழிபடும்போது நேராக நின்று வணங்கக் கூடாது. கெட்ட கதிர்கள் நம் உடலுக்கு கெடுதல் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதற்காகத்தான் நம் முன்னோர்கள் அப்படி சொல்லி வைத்துள்ளனர்.

பொதுவாக கோவிலில் யாக வேள்விகள் நடத்தும்போது அவற்றை கொடி மரம் அருகில்தான் நடத்துவார்கள். இதனால் அந்த இடம் மந்திர சக்தி மிகுந்த இடமாக மாறும்.

அடிக்கடி யாக வேள்விகள் நடத்தும் பட்சத்தில் அல்பா, பீட்டா, காமா கதிர்கள் நிரம்பி விடும். அல்பா, பீட்டா இரு கதிர்களும் பாதிப்பை ஏற்படுத்தாது.

ஆனால் காமா கதிர்கள் பெரும் கெடுதல் ஏற்படுத்தி விடும். எனவே கொடி மரம் எதிரில் நின்று கும்பிடாமல் சற்று ஓரமாக நின்று வழிபட்டு செல்ல வேண்டும்.

# செய்தித்துளிகள்

## ஊரடங்கை மீறிய 150 பேர் கைது

(கொழும்பு)
ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில், நேற்று முன்தினம் 150 பேர் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் முடக்க நிலையில் உள்ள பகுதிகளில் இருந்து, அநாவசியமாக வெளியேற வேண்டாம் எனவும் பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவித்துள்ளனர். (ஜ-4)

## 7 கொத்தணியில் 92 பேர் சிக்கினர்

(கொழும்பு)
இரத்தினபுரி மாவட்டத்தில் ஏழு கொரோனா கொத்தணிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவற்றினூடாக இதுவரை 96 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதுடன் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 1626 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 136 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் மாலனி லொகுபோதாகம தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 10 பிரதேச செயலாளர் பிரிவுகளில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன் பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## மின்னல் தாக்கி ஒருவர் பலி

(கேகாலை)
கேகாலை - புளத்கொஹுபிட்டிய, லெவல தோட்டத்தில் மின்னல் தாக்கி 67 வயதான நபரொருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

கேகாலை மாவட்டத்தின் பல பகுதிகளில் நேற்று முன்தினம் மழையுடன் கூடிய வானிலை நிலவியது.

இதன்போது, லெவல லயன் குடியிருப்பிற்கு அருகில் நின்றுகொண்டிருந்த நபர் மீது மின்னல் தாக்கி சம்பவ இடத்தில் அவர் உயிரிழந்தார். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 140 | 150 |
| தக்காளி | 80 | 80 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 100 | 60 |
| கோவா | 80 | 80 | 100 | 120 |
| கரட் | 100 | 170 | 180 | 200 |
| பூசணி | 50 | 50 | 50 | 50 |
| புடோல் | 80 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 40 | 60 | 60 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 240 | 240 | 260 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 140 | 200 |
| பாகற்காய் | 220 | 260 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 40 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 140 | 100 | 160 |
| லீக்ஸ் | 80 | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 180 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 160 | 200 |
| போஞ்சி | 180 | 160 | 180 | 240 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 100 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 30 | 50 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 300 | — | 320 |
| வெங்காயப்பூ | 250 | 250 | — | 280 |
| முள்ளங்கி | 80 | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | — | 120 |



# சிறுவர் அரங்கம்

## மீனவனின் புத்திசாலித்தனம்



மன்னருக்குமீன்கொண்டு வந்தான் ஒரு மீனவன் அரிதான இந்த மீனை தாங்கள் வாங்குவது தான் பொருத்தமாக இருக்கும் என்றான்.

மன்னரும் மகிழ்ந்து அவனுக்கு ஐந்தாயிரம் பொற்காசுகள் கொடுத்தார். மகாராணி கொதித்து விட்டார்.

ஒரு அற்ப மீனுக்கு இவ்வளவு பணமா? அதை திரும்ப வாங்குங்கள் என்றாள்.

முடிந்த வியாபாரத்தை மாற்றுவது அழகல்ல என்று மன்னர் மறுத்தார். சரி அவனை கூப்பிட்டு இந்த மீன் ஆணா? பெண்ணா? என்று கேளுங்கள்.

ஆண் மீன் என்று அவன் சொன்னால் பெண் மீன் தான் வேண்டும் என்றும் பெண் மீன் என்று சொன்னால் ஆண் மீன் தான் வேண்டும் என்றும் கேளுங்கள்.

எப்படியும் அவனிடமிருந்து பொற்காசுகளை திரும்ப பெற்றே ஆக வேண்டும் என்றாள் மகாராணி.

மீனவன் திருப்பி அழைக்கப்பட்டான். கேள்விக் கணையை மகாராணி தொடுத்தாள்.

அவன் உஷாராக பதில் சொன்னான் இது ஆணுமில்லை, பெண்ணுமில்லை இரண்டின் குணாங்களையும் கொண்ட அதிசய மீன்.

அதனால் தான் அதை மன்னருக்கு கொண்டு வந்தேன் என்றான். இந்த பதிலால் நெகிழ்ந்த மன்னர் மேலும் ஐந்தாயிரம் பொற்காசுகளை கொடுத்தார்.

அதிலிருந்து ஒரு காசு தரையில் விழுந்து ஓடியது. மீனவன் அதை தேடி எடுத்தான். மகாராணி கோபத்தின் உச்சிக்கே போனாள்.

பேராசைக்காரன், கீழே விழுந்த காசை யாராவது வேலைக்காரர்கள் எடுத்து போகட்டுமே என்று விடவில்லை பாருங்கள் என்றாள் மன்னரிடம். அவன் நிதானமாக திரும்பிச் சொன்னான். நான் பேராசையில் அதை எடுக்க வில்லை மகாராணி. அந்த நாணயத்தில் மன்னரின் உருவம் இருக்கிறது.

யாராவது தெரியாமல் அதை மிதித்தால் கூட என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. இதனால் இன்னும் நெகிழ்ந்த மன்னர் மேலும் ஐந்தாயிரம் பொற்காசு களை கொடுத்தார்.

**நீதி: யாரிடம் எப்போது எப்படிப் பேச வேண்டும் என்று தெரிந்திருப்பவர்களே வெற்றியடைகிறார்கள்.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## ஆசான் அரிஸ்ரோட்டில்

**19**

நாட்கள் கடந்தன. அகாடமி குழப்பங்களின் மறு உருவமாக உருமாறத் தொடங்கியது. இனி பொறுப்பதற்கு நேரமில்லை கிளம்பிவிட் டார் அரிஸ்ரோட்டில் தளர்ந்து போனது போல இருந்தது அவருடைய நடை. வழக்கமாக விறு விறுப்பாக நடக்கக்கூடியவர்.

வெளியே வந்துவிட்டாரே ஒழிய அடுத்து செய்ய வேண்டிய காரியங்கள் குறித்த தெளிவான திட்டம் எதுவும் இல்லை யோசித்தார்.

வெறுமனே காலம் கழிப்பதும்கூட ஒரு வகையில் பிளேட்டோவின் இலட்சியத்துக்கு எதிரானது. அவரது கொள்கைகளைப் பரப்புவதற்கு காலதாமதம் செய்வது தவறு.

அப்போதுதான் அவருக்கு ஹெர்மையாஸ் (Hermeias) என்கிற நண்பரின் நினைவு வந்தது.



அட்டார்னேயர் (ஆசியா மைனரின் ஒரு பகுதி)

அட்டார்னேயர் (ஆசியா மைனரின் ஒரு பகுதி) என்கிற நாட்டின் ஜனாதிபதி. நல்ல மனிதர்.

சர்வாதிகாரிதான். இருந்தாலும் நல்ல விடயங்களுக்கு உதவக் கூடியவர். குறிப்பாக கல்வி தொடர்பான காரியங்கள் என்றால் மறு பேச்சில்லாமல் உதவி செய்யக் கூடியவர்.

நேராக ஹெர்மையாஸைச் சென்று சந்தித்தார். அவரிடம் பேசினார். பிளேட்டோவின் அகாடமி, அவர் போதித்த கொள்கைகள், தத்துவங்கள், அகாடமியின் இன்றைய நிலைமை என்று ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் விரிவாகப் பேசினார்.

அரிஸ்ரோட்டில் பேசப் பேச ஹெர்மையாஸின் முகம் மகிழ்ச்சிகரமானதாக மாறிக் கொண்டிருந்தது. அப்போதைக்கு வெறும் புன்னகையை மட்டுமே பதிலாகத் தந்தார் ஹெர்மையாஸ்.

நீங்கள் என் மரியாதைக்குரிய விருந்தினர். என்னுடைய அரண்மனையிலேயே தாங்கள் தங்கினால் நன்றாக இருக்கும். ஜனாதிபதியே சொல்லி விட்டார்.

அதற்கு மேல் என்ன வேண்டும்? அழைப்புக்கு இணங்கி அங்கேயே தங்கினார் அரிஸ்ரோட்டில். அனுதினமும் ஜனாதிபதியைச் சந்திக்க நேர்ந்தது. அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பும் அரிஸ்ரோட்டிலுக்கு கிடைத்தது.

இதனால் தன்னுடைய எண்ணங்கள், கனவுகள் எல்லாவற்றையும் விபரமாகப் பேசினார். அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் ஹெர்மையாஸை ஈர்க்கக்கூடிய வகையில் இருந்தது.

(தொடரும்)

தன்னுடைய கடமையைச் செய்யாமல் காட்டில் காயும் நிலவாகவும் கடலில் பெய்யும் மழையாகவும் இருக்கிறான். அவனால் யாருக்கும் இலாபமில்லை. – விதுரர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கட்டுப்படுத்தினால் நாங்கள்; கட்டுக்கடங்காமல் போனால் நீங்கள்

சின்னத்தனம் என்றொரு சொல் நம் தமிழ் மொழியில் உண்டு.

நல்லவர், நேர்மையாளர், பண்பாளர் என்பதையும் சந்தர்ப்பவாதி, நேர்மையீனமானவர், சுயநலவாதி என்பதையும் தீர்மானிப்பதற்கான அளவு கருவிதான் சின்னத்தனம் என்ற பதமாகும்.

ஒருவரிடம் சிறுமைத்தனம் வெளிப்படுமாக இருந்தால், அஃது அவரின் அடிப்படை இயல்பு.

மாறாக உயர்பண்பாளர்கள், மனிதநேயமிக்கவர்கள், நடுநிலையாளர்கள் என்போரிடம் எப்போதும் உயர்ந்த செயற்பாடுகளே காணப்படும்.

சரியை வழி நின்று முத்திப்பேரின்ப நிலையை அடைந்த திருநாவுக்கரசு நாயனார் உழவாரத் தொண்டில் ஈடுபட்டபோது ஓடும் பொன்னும் வந்தவண்ணமிருந்தன.

எனினும் நாவுக்கரசர் பொன்னைக் கண்டு புளகாங்கிதம் அடைந்தாரில்லை.

உழவாரப் பணியின்போது நிலத்திடை கிடந்த ஓடையும் பொன்னையும் அவர் ஒன்றாகவே பார்த்தார்.

ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார் என்று வாகீசரை இந்த வையகம் போற்றியது.

ஆக, திரிகரணம் எனும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் சுத்தியுடையவர்கள் எப்போதும் நடுநிலை தவறுவதில்லை.

இந்த உயரிய பண்புடைமை அனைத்து மக்களிடமும் இருந்தால் அது உத்தமம்.

எனினும் சகல மக்களிடமும் இதனை எதிர்பார்ப்பது பொருத்துடையதல்ல என்பதால்; ஆளுந்தரப்பிடம், மக்கள் பிரதிநிதிகளிடம், உயர் அதிகாரிகளிடமாவது உயர் பண்புடைமை கட்டாயம் இருந்தாக வேண்டும்.

அவ்வாறு இருந்தால் அவர்கள் சிறுமைத்தனமாக நடந்து கொள்ளமாட்டார்கள்.

இவை ஒருபுறமிருக்க, கொரோனாத் தொற்று நாட்டை சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்துகிறது.

எனினும், இது தொடர்பில் அரசாங்கம் சிரத்தை கொள்ளவில்லை.

உலகம் முழுவதையும் ஆட்டிப்படைக்கும் கொரோனாவை நாம் மட்டும் ஏன் எதிர்க்க வேண்டும்? என்பதுபோல அரசாங்கம் நடந்து கொள்கிறது.

கொரோனா முதலாவது அலையைக் கட்டுப்படுத்த எங்களால் முடிந்தது. அது எங்களின் கெட்டித்தனம் என்பதாக இலங்கை அரசாங்கம் கூறி தற்பெருமை கொண்டது.

ஆனால் கொரோனா இரண்டாவது அலை எழுந்தபோது அது மக்களால் ஏற்பட்ட வினை. மக்களே கொரோனாவைத் தடுத்திருக்க வேண்டும் என்பதாக அரசாங்கம் கூறியது.

இங்குதான் சின்னத்தனம் என்ற சொற்பதத்தின் பொருள் உணரப்படுகிறது.

ஆம், கொரோனாவைக் கட்டுப்படுத்தினால் அதற்கு ஆளுந்தரப்பாகிய நாமே காரணம்.

ஆனால் கொரோனாத் தொற்று கட்டுக்கடங்காமல் பரவுமாயின், அதற்குப் பொதுமக்களாகிய நீங்களே பொறுப்பு என்று கூறப்படுமாயின், இங்குதான் சின்னத்தனங்களின் கோலோச்சல் அறியப்படும்.

எதுஎவ்வாறாயினும் கொரோனாத் தொற்றில் இருந்து எம்மை நாமே பாதுகாப்போம் என்ற உறுதியுரையை அனைத்துப் பொதுமக்களும் எடுத்து அதன் இலக்கை நோக்கி நகர்ந்தாலன்றி, கொரோனா ஏற்படுத்தப்போகும் மனித இழப்புக்களை யாராலும் தடுத்தாட்கொள்ள முடியாது.

### கடந்த காலத் தவறை உணர்ந்த நிலையிலேயே

# தமிழ் அரசியல் பிரதிநிதிகள் கூட்டங்களுக்கு வருகிறார்கள்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் பிரதிநிதிகளிடத்தில் மாற்றங்கள் ஏற்படுவது வரவேற்கத்தக்கது எனத் தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சரும் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா, கடந்த கால தவறுகளை அவர்கள் உணர்ந்து செயற்படுவதனை வரவேற்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசாங்கத்தின் அமைச்சர் கலந்து கொள்ளும் அபிவிருத்தி கூட்டங்களில் தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வது தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள், முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் என்பன தொடர்பில் ஆராயும் விசேட கூட்டங்கள் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. அரசின் அமைச்சர்கள் பலரும் கலந்து கொள்ளும் இந்தக் கூட்டத்திற்கு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

இந்தக் கூட்டங்களிற்கு அவர்கள் வந்தது வரவேற்கத்தக்கது. இந்தக் கட்சிகளுக்குள் அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும் மக்கள் நலன் சார்ந்து இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

அவ்வாறு வேறு வேறு அரசியல் நோக்கங்கள் இருந்தாலும் மக்களுடைய பிரச்சினைகள், தேவைகள் என்ற விடயத்தில் கட்சி பேதங்களுக்கு அப்பால் அனைவரும் கலந்து கொண்டு தெளிவை பெற்றிருக்கின்றனர். கடந்த ஆட்சிக் காலங்களில் அரச அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டங்களில் அழைப்பு விடுக்கப்பட்டாலும் கலந்து கொள்ளாமல் இருந்து வந்தனர்.

ஆனால் கடந்த காலங்களில் தாம் இழைத்த தவறுகளை உணர்ந்து கொண்டு தற்போது இத்தகைய் கூட்டங்களில் கலந்து கொள்வது வரவேற்கத்தக்கது. ஆகவே இவர்கள் கடந்த காலங்களில் விட்ட தவறுகளை உணர்ந்து இத்தகைய முடிவுகளை எடுத்திருப்பதாகவே நினைக்கிறேன் என்றார். (ஞா)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** பெரியவிளான், இளவாலை, மாரீசன்கூடல், சேந்தாங்குளம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கொக்கெலிய கிராமம், கொக்கெலிய இராணுவமுகாம், பண்டாரிக்குளம்கிராமம் குளோப் அரிசி ஆலை, வாரிக் குட்டியூர், நித்தியநகர், மணியர்குளம், எருக்கலங்கல், ராங்கெத்கம, சங்கராபுரம், கற்கடந்தகுளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், Youth Training Centre, தலைமன்னார் Palmyrah House, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ்தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ்தொழிற்சாலை, கரைசல் Palmyrah House Timex ஆடைத்தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை, New Silk Road Aquatic Company ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

"எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்."

-லியூசிலார்கோம் (அமெரிக்கக் கவிஞர்)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மனிதனும் இறைவனும்



ஒருவழியில் பார்த்தால் மனிதன் இறைவனைவிட ஒரு படி மேலானவன் என்று கொள்ளலாம். அவனிடம் இறைத்தன்மை எல்லாம் இருக்கின்றன (God is omnipotent). இறைவன் எல்லா ஆற்றலும் நிறைவாகப் பெற்றவன். அத்தன்மை மனிதனிடம் இருக்கின்றது (God is omniscient). இறைவன் எல்லாம் அறிந்தவன். அத்தன்மையும் மனிதனிடம் இருக்கின்றது. (God is omnipresent). இறைவன் எங்கும் இருப்பவன். மனிதனும் அந்நிலையை எய்த முடியும். ஆராய்ச்சியின் மூலமும்; யோகத்தின் மூலமும் உள்ளது உள்ளபடியே தன்னுணர்வாக, அகக்காட்சியாகப் பெற்று விட்டால் மனிதன் இறைத்தன்மையை முழுமையாகப் பெறுகிறான்.

மனிதனிடம் கடவுள் எல்லாமே இருப்பதோடு கடவுளை அறிந்து கொள்ளும் பெருமையும் இருக்கிறது. இத்தகைய பெருமை அவனிடம் இருக்க அதனை மறந்து தன் உடல் அளவிலே எல்லை கட்டிக் கொண்டிருக்கிறான். இந்நிலையிலேயிருந்து விடுதலை பெற வேண்டுமானால், அவன் தன் உயிரைப் பற்றிய அறிவு பெற வேண்டும். உயிரின் தன்மை என்ன? அதன் மூலம் என்ன? பரம்பொருளே, அதன் எழுச்சி நிலையே உயிராக இருக்கிறது. இன்று இந்த உடலில் உயிர் இருந்தாலும் பரம்பொருளின் தொடர்பு அறுபடாமல் தொடர்ந்து இருந்து கொண்டுள்ளது.

உடலுக்குள் இருக்கும் உயிர், உணர்ச்சியின் அனுபோகத்தில் உடல் வரைக்கும் எல்லை கட்டிக் கொண்டு இருந்தாலும் தன் முழுமையை உணர்ந்து கொண்டால் - தன் மூலத்தையும், வியாபகத்தையும் அறிந்து கொண்டால் எல்லாவற்றிலும் தன்னையே பார்க்கின்ற ஒரு தன்மை வந்து விடுகின் றது. சிறுமை, பெருமை, தன்முனைப்பு எல்லாம் நீங்கி விடுகின்றன. இந்த நிலையில் பிறரை மதிக்கவும், ஆதரிக்கவும், பரிவு காட்டவும், மேல்நிலைக்குக் கொணரவுமான பொறுப்புணர்ச்சியைப் பெறுகிறான்.

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 15.11.2020-13.11.2021

## ஏழாமிடத்தில் குரு பகவான், இல்லற வாழ்க்கை இனி அமையும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**கடக இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 6-ம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 15.11.2020 அன்று 7-ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கின்றார். அங்கு ஓராண்டு காலம் வீற்றிருந்து பார்வை பலனால், உங்கள் விருப்பங்கள் நிறைவேற உறுதுணையாக இருப்பார். இப்பொழுது பெயர்ச்சியாகும் குரு, நீச்சம் பெற்றாலும்கூட, நேரடியாக அவர் பார்வை உங்கள் இராசியின் மீது பதிகின்றது. எனவே தொட்டது துலங்கும். தொல்லைகள் அகலும். எதை எப்படிச் செய்ய வேண்டுமென்று நினைத்தீர்களோ, அதை அப்படியே செய்து முடிப்பீர்கள். இடையில் சில மாதத்திற்கு எட்டாமிடத்திற்கும் குரு செல்கின்றார். குரு வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். சுய ஜாதகத்தில் தெசாபுத்தி பலம் பெற்றவர்களுக்கு, நினைத்ததெல்லாம் நிறைவேறும். அஷ்டம குருவின் ஆதிக்க காலத்தில் தடைகளும், தாமதங்களும் வருமேயானால் வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருவை வழிபடுவதன் மூலம் நன்மைகளைப் பெற முடியும்.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக, குரு பகவான் உங்கள் இராசியை நேரடியாகப் பார்க்கின்றார். பிறகு 3, 11 ஆகிய இடங்களையும் பார்க்கப் போகின்றார். உங்கள் இராசியைக் குரு பார்ப்பதால் உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும். உறவினர்களின் ஒத்துழைப்பும் திருப்திகரமாக இருக்கும். வீடு தேடி வந்த வீண் பிரச்சினைகள் அகலும். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். நல்ல சந்தர்ப்பங்கள் நாடிவரும் நேரமிது. திடீரென அறிமுகமாகும் ஒருவரால் உங்களுக்கு நற்பலன்கள் வந்து சேரப்போகின்றது.

குருவின் பார்வை 3ஆம் இடத்தில் பதிவதால் முன்னேற்றத்தின் முதல் படிக்குச் செல்ல வாய்ப்புகள் கைகூடி வரும். குரு பார்வயால் வெற்றிகள் ஸ்தானம் புனிதமடைகின்றது. உத்தியோகம் தொடர்பான நேர்முகத் தேர்வில் இப்பொழுது வெற்றி கிடைக்கும். அதிகார வர்க்கத்தினர்களின் ஆதரவோடு அரசியல்களத்தில் குதிப்பீர்கள். பொது வாழ் வில் புதிய பொறுப்புகள் திடீரென வரலாம்.

ஒருசிலருக்கு உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் வரக்கூடிய வாய்ப்புகள் உண்டு. உடன்பிறப்புகள் உங்கள் கடன் சுமை குறைய உதவிபுரிவர். குருவின் பார்வை 11ஆம் இடம் எனப்படும் இலாப ஸ்தானத்தில் பதிவதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

வெளிநாட்டிலிருந்து கூட அழைப்புகள் வரலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடு தலாகக் கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் உங்கள் கருத்துகளுக்கு ஒத்து வருவர். பணியாளர்களின் தொல்லை அகலும். இதுவரை வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழில் இனி சொந்தக் கட்டடத்திற்கு மாறும் அமைப்பு கைகூடும். தெளிந்த மனதுடன் செயற்படுவீர்கள். கௌரவப் பதவிகள் உங்களைத் தேடி வரும். மூத்த சகோதரத்துடன் இருந்த மோதல்கள் விலகும்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

**உத்தராடம் நட்சத்திரக்காலில் சூரி யன் சாரத்தில் குரு சஞ்சாரம் (15.11. 2020 முதல் 04.01.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்திற்கு அதிபதி சூரியன் ஆவார். எனவே தனாதிபதி சூரியன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது தனவரவு திருப்திகரமாக இருக்கும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். இதுவரை சங்கிலித் தொடர் போல வந்த கடன்சுமை இனிக் குறையும். தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். உங்களுக்கோ, உங்கள் உடன் பிறப்புகளுக்கோ சுபகாரியம் நடைபெறுவதில் தடை இருந்தால், அந்தத் தடைகள் இனி தானாக விலகும். பிரபலங்களின் நட்பால் பெருமை காண்பீர்கள். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அசையாச் சொத்துக்கள் வாங்கும் வாய்ப்பு உண்டு. வெளிநாட்டில் வசிக்கும் உறவினர்கள் வழியில் அனுகூலமான தகவல் வந்து சேரும்.

**திருவோணம் நட்சத்திரக்காலில் சந்திரன் சாரத்தில் குரு சஞ்சாரம் (05.01.2021 முதல் 01.03.2021 வரை)**

சந்திரன் உங்கள் இராசிநாதன் ஆவார். அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, 'குருசந்திர யோக' அடிப்படையில் மிகுந்த நன்மைகளைச் செய்வார். குறிப்பாக தொழில் வளர்ச்சி மிகச்சிறப்பாக இருக்கும். பெற்றோர்களும், உற்றார், உறவினர்களும் உங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பர். வியாபாரம் வெற்றிநடை போடும். வெளிநாடு செல்லும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இதுவரை தடையாக இருந்த பயணம் த்தானாக நடைபெறும். 'நூதன வாகனங்கள் வாங்கிப் பயணிக்க வேண்டும்' என்று விரும்புபவர்களுக்கு அது கைகூடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகள் கிடைக்கும் வாய்ப்பு உண்டு. விவசாயம், பண்ணை வீடுகள் அமைக்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். ஏற்றுமதி, இறக்குமதி வணிகம் செய்வோர் எதிர்பார்த்ததைவிட கூடுதல் இலாபம் ஈட்டுவர்.




**அவிட்டம் நட்சத்திரக்காலில் செவ் வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (02.03. 2021 முதல் 04.04.2021 வரை, மீண்டும் 14.09.2021 முதல் 13.11.2021 வரை)**

இக்காலத்தில் குரு பகவான் சஞ் சாரம் மிகச்சிறப்பாக இருக்கின்றது. செவ்வாய் உங்களுக்கு யோகம் செய்யும் கிரகமாகும். பாக்கிய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய் சாரத்தில் குரு பகவான் உலாவரும் பொழுது, நீங்கள் நினைக்க இயலாத யோகம் வந்துசேரப்போகின்றது. வியாபாரம் சூடுபிடிக்கும். அனுபவஸ்தர்களின் ஆலோசனை தக்க சமயத்தில் கைகொடுக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவிகள் தானாகவே வந்து சேரலாம். ஒரு சிலருக்கு தலைமைப் பொறுப்புகளும் எதிர்பாராத வகையில் கிடைக்கும்.

மேலதிகாரிகள் உங்கள் திறமையைக் கண்டு ஆச்சரியப்படுவர். நீங்கள் கேட்ட சலுகைகளையும் உடனுக்குடன் வழங்குவர். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதியும், எதிர்கால நலன்கருதியும் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். கைவிட்டுப்போன சொத்துக்களை மீண்டும் கைப்பற்றுவீர்கள். பஞ்சாயத்துக்கள் உங்களுக்கு சாதகமாக முடியும். தொழிலில் இருந்த குறுக்கீடு சக்திகள் அகலும்.

**அவிட்டம் மற்றும் சதயம் நட் சத்திரக்காலில் செவ்வாய் மற்றும் ராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (05.04.2021 முதல் 13.09.2021 வரை)**

இக்காலத்தில் குரு, கும்ப இராசியில் சஞ்சரிக்கின்றார். அப்பொழுது அவரது பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. ஆயினும் அஷ்டமத்தில் குரு அடியெடுத்து வைத்திருப்பதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். வீண் விரயங்கள் உண்டு. எதிர்ப்புகளும் வீடு தேடி வரும். இல்லத்தில் உள்ளவர்களின் உடல் ஆரோக் கியம் பாதிக்கப்பட்டு மருத்துவச் செலவுகளும் அதிகரிக்கலாம். இருப்பினும் குரு பார்வை சுக ஸ்தா னத்தில் பதிவதால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. வெளிமாநிலம் மற்றும் வெளிநாடு செல்லும் முயற்சியை தள்ளி வைப்பது நல்லது.

**குருவின் வக்கிர இயக்கம்**

16.06.2021 முதல் 13.10.2021 வரை குரு வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். கும்பம், மகரம் ஆகிய இரண்டு இராசிகளிலும் வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்ய வேண்டும். குடும்பச்சுமை அதிகரிக்கும். வாங்கிய கடனைக் கொடுக்க ஏதேனும் சொத்துக்களை விற்கும் சூழ்நிலை கூட உருவாகலாம். வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் வரலாம். வரும் மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளும் விதத்திலேயே அமையும். மறைமுகப் பகை அதிகரிக்கும். உதவி செய்வதாகச் சொன்னவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்கள், பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்படும் சூழ்நிலை கூட உண்டு. எனவே கூட்டாளிகளை அனுசரித்துக் கொள்வதோடு மேலிடத்தில் உள்ளவர்களை பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

இல்லத்து பூஜை அறையில் குரு தட்சிணாமூர்த்தியின் படம் வைத்து குரு கவசம் பாடி வழிபடுவது நல்லது. மேலும் சதுர்த்தியன்று விரதமிருந்து ஆனை முகப் பெருமானை வழிபடுவதன் மூலம் சகல யோகங்களும் வந்து சேரும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்க்ள்**

கடக ராசியில் பிறந்த பெண்களுக்கு, குரு பார்வை இருப்பதால் முன்னே ற்றத்தில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும். உடல்நலம் சீராகும். உன்னத வாழ்விற்கு அஸ்திவாரம் அமைத்துக் கொடுக்கும். புகுந்த வீட்டிற்குப் பெருமை சேர்ப்பீர்கள். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். தாய்வழி ஆதரவு திருப்திகரமாக இருக்கும். உடன் பிறப்புகள் நீங்கள் கேட்ட உதவிகளைச் செய்ய முன்வருவர்.

பணிபுரியும் பெண்களுக்கு மேலிடத்தில் நல்ல பெயர் கிடைக்கும். அவர்களது திறமையைப் பார்த்து ஊதிய உயர்வு கொடுக்க மேலதிகாரிகள் முன் வருவர். வீடு கட்ட எடுத்த முயற்சிக்கும் உதவிகள் கிடைக்கும். பௌர்ணமி வழிபாடு பலன்தரும்.

(தொடரும்)

## ஐவர் மீது...

வரும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதன்படி ஹரின் பெர்னாண்டோ, சுஜித் பெரேரா, மயந்த திஸாநாயக்க, நளின் பண்டார மற்றும் ஜே.சி.அலவத்துவல ஆகியோர் இன்று ஆஜராக வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஞா)

## கட்டணங்கள்...

என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம கூறியுள்ளார்.

இருப்பினும், சாதாரண அமைப்பின் கீழ் இயங்கும் பேருந்துகளுக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்படாது. அதாவது இருந்து கொண்டும், நின்று கொண்டும் பயணிகள் பயணிக்க அனுமதிக்கப்படும் பேருந்துகளின் கட்டணத்தில் மாற்றமிருக்காது.

இருக்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பயணிகளை ஏற்றிச் செல்லும் மற்றும் ஒரு இருக்கைக்கு ஒரு பயணிகளை ஏற்றிச் செல்லும் பேருந்துகளின் கட்டணத்தில் திருத்தம் செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார். (ஞா)

## மல்லாவியில்...

றினால் குடும்பஸ்தர் ஒருவர் வாள்வெட்டுத் தாக்குதலுக்கு உள்ளாகி ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தின்போது பாலிநகர் கிராமத்தில் வசிக்கும் பிரசாத் என்று அழைக்கப்படும் பாலச்சந்திரன் ஆனந்தப்பிரசாத் (வயது - 30) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தரே வாள்வெட்டுத் தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஞா-15)

## வெலிக்கடைச்...

என்று கோவிட் - 19 நோய்த் தொற்றைத் தடுப்பதற்கான செயலணி அறிவித்துள்ளது.

அவர்களில் 63 பெண் கைதிகளும் 8 ஆண் கைதிகளும் ஒருவர் உத்தியோகத்தர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதிகளில் ஒருவர் சிறை சமையலறையில் பணி புரிந்ததாகக் கூறப்படுகிறது.

அதன்படி, வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 102 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## பல்நோக்கு...

என்று இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுடனான கிராமிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்தில் சமூக உட்கட்டமைப்பு குழுவின் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

அந்தக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டம் தொடர்பில் பிரதமரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் பேரழிவாக விளங்கும் போதைப் பொருளுக்கு அடிமையான இளைஞர்களுக்கான புனர்வாழ்வு நிலையமொன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்த அமைச்சர், இளைஞர் யுவதிகளுக்கான பல்நோக்கு இளைஞர் நிலையமொன்றை நிறுவுவதற்கான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

குறித்த நிலையத்தினுள் வெளிப்புற உடற்பயிற்சி பிரிவு, ஒரு நடை பாதை, இணைய அணுகல் கொண்ட கணினிப் பிரிவு என்பன உள்ளடக்கப்படுவதுடன், உணவகம் போன்ற வசதிகள் கொண்ட, முழுக் குடும்பமும் ஒன்றாக விளையாட்டுகளில் ஈடுபடக்கூடிய, அமைதியாக தங்களது நேரத்தை செலவிடக்கூடிய வகையில் இந்நிலையம் அமையும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாவதை தடுப்பதற்கும், குடும்ப நல்லிணக்கத்தை மேம்படுத்தவும், தினசரி உடற்பயிற்சி மூலம் உடல் ஆரோக்கியத்தை பேணவும் உதவும் என்று அமைச்சர் மேலும் கூறினார் என்றுள்ளது. (ஞா)

## 35ஆவது...

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 35 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## கொரோனா பர...

மன்றத்தின் பல பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளது என்றும், மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

முதியவர்கள் மற்றும் நாள்பட்ட நோய்கள் உள்ளவர்கள் வீட்டிலேயே இருக்க வேண்டும், ஒரு வீட்டிலிருந்து ஒரு நபர் மட்டுமே தங்கள் தேவைகளை நிறைவு செய்ய வெளியில் வருவது நல்லது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர், மருத்துவ வல்லுநர் சுதத் சமரவீர தெரிவித்தார். (ஞா)

## 510...

510 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் ஜனவரி மாதம் முதல்நேற்று வரை 13 ஆயிரத்து 929 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஞா)

## ஐம்பொன் சிலை...

யாக உள்ள குளத்துக்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஐம்பொன் சிலைகள் மீட்கப்பட்டுள்ளன.

இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் அந்த இடத்துக்கு சென்ற இராணுவத்தினர், குளத்துக்குள்ளிலிருந்து சிலைகளை மீட்டெடுத்தனர்.

சுமார் 68 வருடங்களுக்கு முற்பட்ட முருகன், 3 மயில்கள், கலசம் ஆகிய ஐம்பொன் சிலைகளே மீட்கப்பட்டன. அந்தக் காலப்பகுதியில் தங்கம் அதிகளவு சேர்க்கப்படுவதால் அவற்றின் தற்போதைய பெறுமதி ஒன்றரைக் கோடி ரூபாய் வரும் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

நீண்டகாலத்துக்கு முன்பு அவை புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மீட்கப்பட்ட சிலைகள் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

அந்தச் சிலைகளை இந்தியாவுக்கு கடத்தும் நோக்குடன் குளத்துக்குள் புதைத்து வைத்திருக்கலாம் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (ஞா)

## கிளி...

மானதால் ஜெயபுரம் வடக்கு, தெற்கு பகுதிகள் ஒரு நாள் தற்காலிக சமூக முடக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஜெயபுரம் கிராம சேவையாளர் பிரிவே இவ்வாறு தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது. மாதிரி பரிசோதனைகள் இடம்பெறுவதற்காக இவ்வாறு சுகாதார தரப்பினால் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த கிராமத்திற்கு உட்செல்லல் மற்றும் வெளியேறல் ஆகியன தடுக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலினை பூநகரி பிரதேச செயலாளர் எஸ். கிருஸ்ணேந்திரன் உறுதிப்படுத்தியுள்ளார். (ஞா-100)




## தமிழகம் செல்ல...

தமிழகத்திற்கு தப்பி ஓடியவரை, யாழ்ப்பாணத்திலிருந்து படகு மூலம் தமிழகம் கொண்டு சென்றவர் வல்வெட்டித்துறை - தொண்டைமானாறு பகுதியை சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டிருக்கின்றார்.

இதனடிப்படையில் குறித்த நபர் இந்தியாவுக்கு சென்று வந்திருக்கலாம் என்ற சந்தேகத்தினடிப்படையில் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் பி.சி.ஆர் பரிசோதனை நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஞா)


**செவன**

திகதி: 08/11/2020
சீட்டிழுப்பு இலக்கம்: 311
ஆங்கில எழுத்து: R — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 33 36 37 46
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

**மெகா பவர்**

திகதி: 08/11/2020
சீட்டிழுப்பு இலக்கம்: 0667
வெற்றி எழுத்து: G — சுப்பர் இலக்க: 25 — வெற்றி இலக்கங்கள்: 34 56 67 70

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி: 08-11-2020
சீட்டிழுப்பு இலக்கம்: 2595
ஆங்கில எழுத்து: L — வெற்றி இலக்கங்கள்: 32 42 54 62
தேசிய லொத்தர் சபை

**தன நிதானய**

திகதி - 2020.11.08
சீட்டிழுப்பு இலக்கம் - 339
ஆங்கில எழுத்து: M — வெற்றி இலக்கங்கள்: 09 11 27 37
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

**மஹஜன சம்பத**

திகதி: 2020/11/08
சீட்டிழுப்பு இலக்கம்: 4300
ஆங்கில எழுத்து: V — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 1 2 1 3 2 9
தேசிய லொத்தர் சபை

**அத கோடிபதி** ADA KOTIPATHI

ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1096
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2020.11.08
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 82,781,680/-
வெற்றி இலக்கங்கள்: 17 32 44 54 — ஆங்கில எழுத்து: T
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சனிதா** Shanida

ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.11.08
சீட்டிழுப்பு இல. : 3426
வர்ணம் : இளஞ்சிவப்பு
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,482,811.20
வெற்றி இலக்கங்கள்: 14 31 53 66 — ஆங்கில எழுத்து: L
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்: 8177
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**ராசி**

சுப்பர் ஜக்பொட் 4,715,199/=
திகதி : 08.11.2020
வெற்றி வாரம் : 2977
வர்ணம் : ஊதா
வெற்றி இலக்கங்கள்: 08 17 21 61 — சிம்மம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,302,640

**SUPER BALL**

சீட்டிழுப்பு வாரம் 1270 — நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 08.11.2020 — தினம் ஞாயிறு
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: Q 25 51 53 66
SUPER 500 விசேட இலக்கம்: 3 8 5 9
அபிவிருத்தி லொத்தர் சபை

**ஜயோதா**

சீட்டிழுப்பு வாரம்: 648
வர்ணம்: மஞ்சள்
திகதி: 08.11 2020
A 01 13 59 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,574,370
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், பலாலி றோட், கோண்டாவிலில்
5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
11/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
( கோண்டாவில் சந்திக்கு அருகாமை )
(4584)

**076 888 4625, 077 505 8561**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், நீர்வேலி, கரந்தன் குறுக்கு வீதியில்
2 3/4 பரப்புக் காணி (ராசா கடை அருகாமை)
விற்பனைக்கு உண்டு. மற்றும் 44 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு. பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
(4584)

**077 80 51 655**

## உடனடி வேலைவாய்ப்பு

**STUDY & WORK IN NORTH PROVINCIAL**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா....
திறமையானவர்கள் நேர்முகத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவர்.

* வருமானம் : 18,000/= - 45,000/=
* வயதெல்லை : 18 - 30
* கல்வித் தகைமை: G.C.E O/L OR A/L கற்றிருத்தல்

**பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.**

தொடர்புக்கு : 076 770 7759
முற்பதிவுகளுக்கு : (Name/NIC/Address) Viber, WhatsApp, SMS
மூலம் அனுப்பி வையுங்கள்.
(4583)

Inner Circle No. 100/3, Manipay Road, Jaffna. (முட்டாசுக்கடைச் சந்தி)

மீண்டும்

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த
எமது சேவை மீண்டும் வழமைபோல்
அனைத்து நாடுகளுக்கும்
**100%** பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
(C-643)

### அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- **021 222 6113**

### அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்



இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- **021 222 3536**



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# மூன்றாம் உலகப்போர் ஏற்படும் ஆபத்து!

## இங்கிலாந்து இராணுவத் தளபதி எச்சரிக்கை

(பிரித்தானியா)

3ஆம் உலகப் போர் ஏற்படுவதற்கான ஆபத்து உண்மையில் உள்ளதாக இங்கிலாந்து முப்படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் நிக் கார்டர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இங்கிலாந்து நாட்டின் முப்படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் நிக் கார்டர் 'ஸ்கை நியூஸ்' செய்தி நிறுவனத்திற்கு நேற்று சிறப்பு பேட்டி ஒன்றை அளித்தார். அந்த பேட்டியில் அவர் பல்வேறு விவகாரங்கள் குறித்து பேசினார்.

**தலைமைத் தளபதி ஜெனரல் நிக் கார்டர் பேசியதாவது.**

பொருளாதார நெருக்கடிகள் பல காலங்களில் பாதுகாப்பு நெருக்கடிக்கு கொண்டு சென்றுள்ளன. தற்போது கொரோனா வைரஸ் காரணமாக உலக பொருளாதாரம் பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த சூழ்நிலை பாதுகாப்பு நெருக்கடியை உண்டாக்கும்.

வரலாற்று நிகழ்வு மீண்டும் ஏற்பட்டு விடக்கூடாது என நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். கடந்த நூற்றாண்டை நாம் திரும்பிப் பார்க்கும் போது இரண்டு உலகப் போர்களுக்கு முன்னதாகவும் மோதல்கள் தவறான முடிவுகள் காரணமாக உலகப் போருக்கு நம்மை கொண்டு சென்று விட்டது என்பதை மறுக்கமுடியாது. அது போன்ற ஒன்றை நாம் மீண்டும் பார்க்கக்கூடாது என நம்புகிறோம்.

3ஆம் உலகபோர் உண்மையிலேயே ஏற்படுமா? என்றால் அதற்கான ஆபத்துக்கள் உள்ளது என்று கூறுகிறேன். அந்த அபாயங்கள் குறித்து நாம் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன் என்றார். (ஞ)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், கல்வியங்காடு,
நாயன்மார்க்கட்டு கேணியடியில்
12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
(4584)

**076 436 5814, 074 075 4204**

## பணியாளர் தேவை

நகை வியாபார நிலையத்தில் பணிபுரிவதற்கு
பெண் வேலையாட்கள் தேவை.
காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை
நேரில் வரவும்.
(4582)

### அருள் ஜுவல்லறி

இல. 9, புதிய மாநகர சபை கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**077 772 9525**

## தற்போதைய காலகட்டத்தில் வேலை இழந்தோருக்கான அரியதோர் செயற்திட்டம்

2021ஆம் ஆண்டிற்கான புதிய கிளை நிறுவனங்களை பன்முகப்படுத்தி வட பகுதியில் பின்வரும் 05 மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார்**

இதற்காக 18-40 வயதிற்குட்பட்ட தரம் 10, O/L, A/L படித்த ஆண், பெண் இருபாலாரையும் மையப்படுத்தி எமது W.E.C நிறுவனமானது களமிறங்கியுள்ளது.

**எமது நிறுவனத்திலிருந்து கிடைக்கப்படும் சலுகைகள்**

* வெளிமாவட்டத்திலிருந்து வருபவர்களுக்கான தங்குமிட வசதிகள்.
* போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
* ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் மற்றும் சுற்றுலாப் பயணங்கள்.
* சம்பள அளவுத்திட்டமாக திறமைக்கேற்ப 18,500 /= தொடக்கம் 42,800 /= வரை பெற்றுக்கொள்ள முடியும்.

(4572)

Note :- இப்பதிவுகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் டிசம்பர் 31 ம் திகதிக்கு முன்னர் கீழ்குறிப்பிட்ட தொலைபேசி இலக்கம் ஊடாக உங்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

( SMS ) :- 076 711 8479
Hotline :- 021 453 2335, 076 716 9269

## DMI ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

A/L - 2021, 2022
ஆகிய பிரிவுகளுக்கு
புதிய அனுமதி உண்டு
பௌதிகவியல்-N.BABU
**Online வகுப்புக்கள்**
(4584)
நேர அட்டவணை, நுழைவு இலக்கம் ஆகிய
வற்றை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
அலுவலக நேரம் - (திங்கள் - வெள்ளி )
9.00 a.m - 12.00 p.m **077 936 5087**

## எங்கிருந்தும் கற்றுக்கொள்ளுங்கள்

# Full-stack Web Development

மென்பொருள் கம்பனியில் இணைந்து மென்பொருள் அபிவிருத்தியாளர் ஆகவேண்டுமா? அல்லது ஒரு தொழில்நுட்பம் சார்ந்த கம்பனியை ஆரம்பிக்கவேண்டுமா?

5 மாதங்களுக்கான 100% இணையவழிக்கற்கை.

தகைமை : க. பொ. த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி இருத்தல்
மற்றும் ஒரு நாளில் 6 மணித்தியாலங்கள்
செலவிடக்கூடியதாக இருத்தல்.

மொழிமூலம்: தமிழ்
(4551)

விண்ணப்ப முடிவுத்திகதி
14.11.2020



ŪKi

விண்ணப்ப படிவங்களை பெற்றுக் கொள்ள www.uki.life என்ற இணையத்தளத்தினை பார்வையிடவும்.

மேலதிக தகவல்களுக்கு
www.uki.life info@uki.life 0775694587

## மணமகள் தேவை

நட்சத்திரம் - கார்த்திகை,
பி. திகதி - 19.09.1981,
லண்டனில் வசிக்கிறார், P.R உண்டு.
கல்வி - Jaffna B.Sc., London M.Sc.
சொந்தத் தொழில் புரிபவர்.
விவாகரத்துப் பெற்றவர்.
(C-654)

தொடர்பு
**077 880 0353, 077 068 1797**

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240

எமது நேரடிக்கிளைகள்

* யாழ்ப்பாணம்
* கிளிநொச்சி
* சாவகச்சேரி
* நெல்லியடி
* கொடிகாமம்
* மானிப்பாய்
* புதுக்குடியிருப்பு
* சுன்னாகம்
* பருத்தித்துறை
* வல்வெட்டித்துறை

(C-505)

## நாளையுடன் பதிவுகள் நிறைவடைகின்றன

### அமெரிக்க அதிஸ்ட விசா



2022ல் நீங்களும் அமெரிக்காவில்...



18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

**காத்திருக்காமல் உடனே பதியுங்கள்**

இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்
0768226244
55000 இலவச விசாக்கள்

கடந்த காலங்களில் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

அப்பா V2 Travels இல் அமெரிக்க லொத்தர் விசா பதிகின்றார்கள் நானும் விண்ணப்பம் போடலாமா? என மகள் கேட்டபோது ஐயாளங்களுக்கெல்லாம் வெளிநாடு செல்ல கொடுப்பனை இல்லை ஆனாலும் உங்களுக்கு விருப்பம் இருந்தால் பதியுங்கோ என்று அனுமதி கொடுத்தேன். சிறிது காலத்தின் பின் நான் கடற்கரையில்நின்றபோது சந்தோசமாக வந்த மகள் தனக்கு அமெரிக்க விசாவிற்கான அதிஸ்டம் கிடைத்துள்ளது என சொன்னபோது எனக்கு மிகவும் ஆனந்தமாக இருந்தது நாம் கனவிலேகூட நினைத்து பார்த்திருக்காத வெளிநாடு செல்லும் அரிய வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்த V2 Travels இக்கு எமது நன்றிகள்.
(C-505)



அமெரிக்கா விசா வெற்றியாளர் கஜேந்திரனின் தந்தை

V2 Travels

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.